Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :116 பங்குனி 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 24 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி



"எல்லாம் தாராளமா இருந்தாலும் அடிச்சு பிடிச்சு நெருக்கியடிச்சு வாங்காட்டி எங்களுக்கு பத்தியப்படாது பாருங்கோ"

# நாடாளுமன்றம் மீண்டும் கூடும்?

## இன்று அவசர சர்வகட்சி மாநாடு: கூட்டமைப்பும் பங்கேற்கும்

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸால் நாடு பீதியடைந்துள்ள நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தை அவசரமாகக் கூட்டுகின்றார். இதற்கான அழைப்பு நேற்று சகல கட்சித் தலைவர்களுக்கும் பிரதமர் அலுவலகத் தால் அனுப்பப்பட்டுள்ளது.

14 ►

## 6 மணிக்கே கடைகளை திறக்கவும்

யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களை இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கே திறக்குமாறு யாழ்.வணிகர் கழகம் ,வர்த்தக நிலைய உரிமையாளர்களைக் கோரியுள்ளது.

இன்றுகாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் மதியம் 12 மணிக்கு மீள நடைமுறைக்கு வருகின்றது. அதனால்

14 ►

## பொருள்கள் தாராளம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ஏராளமான லொறிகள் நேற்றும் நேற்றுமுன்தினமும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்துள்ளன. எனவே பொதுமக்கள் முண்டியடிக்காது பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வராது என்றும் யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசே

14 ►

## மதபோதகருடன் தொடர்பிலிருந்த 18 பேர் நேற்று தல்செவனவில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொரோனா தொற்றுக்கு உள்ளான சுவிஸ் மதபோதகருடன் நேரடித் தொடர்பிலிருந்ததாக அடையாளம் காணப்பட்ட 18பேர் காங்கேசன்துறை தல்செவனவில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையங்களுக்கு நேற்று இரண்டு கட்டங்களாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

அரியாலையில் ஆராதனைக் கூட்டம் நடத்துவதற்கு சுவிஸி

14 ►

## எரிபொருள் தாராளம்

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலை காரணமாக, அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கு அமைவாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற்றோல் விநியோக நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதுதொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் வீரசிங்க தெரிவித்தாவது,

தட்டுப்பாடின்றி முழு நாட்டுக்கும் எரிபொருளை

14 ►

## கொரோனா '97'

- நேற்று மட்டும் 14 பேர் அடையாளம்
- இருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்
- 222 பேர் தொடர்ந்து கண்காணிப்பு
- 3,506 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 97 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். நேற்று மட்டும் 15 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 82 இலிருந்து 97 ஆக உயர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

14 ►

## ஆனையிறவுக்கு அப்பால் பயணிக்க அனுமதி தேவை

கிளிநொச்சி, மார்ச் 24

உரிய அனுமதி பெறாது பயணிக்கும் சகலரும், ஆனையிறவு சோதனைச்சாவடியில் திருப்பி அனுப்பப்படுகின்றனர். எனவே, குடாநாட்டை விட்டுப் பயணிக்கவேண்டிய தேவை ஏற்பட்டால், முதலில் அனுமதியைப்பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாகனங்களும் முறையான அனுமதி பெற்றுத்தான் ஆனையிறவு சோத

14 ►

## கொரோனா தொற்று சந்தேகம்

## 6 மாதக் குழந்தை உள்ளிட்ட 4 பேர் யாழ். போதனாவில் !

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரியாலையில் இடம்பெற்ற ஆராதனையில் பங்கேற்றவர்களுடன் தொடர்பிலிருந்த நான்கு பேர் கொரோனா தொற்றுச் சந்தேகம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர் என மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

14 ►

## வடக்கில் ஊரடங்கு மீண்டும் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 24

கொழும்பு, கம்பஹா, புத்தளம் மாவட்டங்களிலும் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்கு சட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு, இன்று நண்பகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த ஊரடங்குச் சட்டம் வெள்ளிக் கிழமை காலை 6 மணி வரை நடைமுறையிலிருக்கும். இம் மாவட்டங்களில்

14 ►



## இலங்கையில் 2 வாரங்களில் 20,000 பேருக்கு கொரோனா!

மருத்துவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இரண்டு வாரங்களில் 20 ஆயிரமாக அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. உரிய

05 ►

## ஒருநபரால் 403 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸானது ஒரு மாதத்துக்குள் நபரொருவரிலிருந்து சுமார் 403 பேருக்கு மிக வேக

14 ►

## களப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசமில்லை

யாழ்ப்பாணத்தில் அவலம்!!!

யாழ்ப்பாணம், மார்ச் 24

தாவடியில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரின் வீடு, அவர் அதிகம் நடமாடிய இடங்களில் நேற்றுக் காலை கிருமித் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது

14 ►

மாவட்டத்துக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு

# கூட்டமைப்பின் கோரிக்கையையடுத்து பிரதமர் மஹிந்த நடவடிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த அரசால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் நாளாந்த உழைப்பாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமா ன மாவை.சோ.சேனாதிராசா விடுத்த வேண்டுகோளையடுத்து, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

"ஊரடங்குச் சட்டத்தால் நாளாந்தம் உழைப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்றுக் காலை 11 மணிக்குப் பேசினேன். அவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன். அதற்கு அமைவாக ஆளுநர் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உடனடியாக 10 லட்சம் ரூபா ஒதுக்குவதாகக் குறிப்பிட்டார்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார். (ஒ.5)



## கொரோனா தடுப்பு : அரியாலையில் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சுவிஸிலிருந்து வந்த மதபோதகருக்கும், அவரைச் சந்தித்தவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர் ஆராதனை நடத்திய தேவாலயம் அமைந்துள்ள அரியாலைப் பகுதியில் சுகாதாரத்துறையில் நேற்று விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

மதபோதகரின் ஆராதனைக் கூட்டத்தில் பங்குபற்றியவர்கள், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் எனப் பலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மக்களே அதிகளவில் ஆராதனைக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தமையால், அந்தப் பகுதியில் கொரோனா தொடர்பானவிழிப்புணர்வுநடவடிக்கைகளைபொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்றுக் காலை முன்னெடுத்தனர். (ஒ.5.20)

## சந்தைப்படுத்தல் இல்லை விவசாயிகளுக்குப் பாதிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 24

நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் காரணமாக, நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தால், விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த மரக்கறிகளை நாளாந்தம் சந்தைப்படுத்த முடியாமல் திணறுகின்றனர்.

தம்புள்ள, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பெரிய மற்றும் சிறியசந்தைகள் மூடப்பட்டுள்ளதால், மரக்கறிகளைச் சந்தைப்படுத்த முடியாமல் உள்ளது.மரக்கறிகள் தோட்டங்களில் தேங்கியுள்ளமையால், பெரும்நஷ்டத்தை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு மரக்கறிகளை அரசாங்கமும்,விவசாய அமைப்பும் சந்தைப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுத்தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-70)



யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள்

## உணவுப் பொதிகள் வழங்க ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஊரடங்குச் சட்டத்தால் உணவுப்பொருள்களைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் ஏற்பாட்டில் நிவாரணப் பொதி வழங்குவது தொடர்பில் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் ஆராயப்பட்டது.

கொரோனா அச்சம் காரணமாக நாட்டில் தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

மக்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளமையால் பலர் உணவுக்கு நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அதனால் யாழ்ப்பாண மாநகர சபையில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் சார்பிலும் ஒவ்வோர் உறுப்பினர் வீதம் விசேட சந்திப்பை முதல்வர் ஆனல்ட் ஏற்பாடு செய்திருந்தார்.

சந்திப்பில் சகல கட்சிகளும் குறித்த விடயத்தை ஏற்றுக்கொண்டன. இதன் பிரகாரம் இரு பிரதேச செயலாளர் பிரிவிலுமுள்ள வறுமைக்குட்பட்ட மக்களின் விவரங்களை பிரதேச செயலாளர்கள் மூலம் உறுதி செய்து நிவாரணப் பொதி விநியோகிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-105)



## உணவுப்பொதிகள் கையளிப்பு

வவுனியா.மார்ச் 24

நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் வவுனியா பிரதேசத்தில் அன்றாடத் தொழில் புரியும் 34 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஜீவஊற்று அன்பின் கரம் அமைப்பால் இந்த உதவிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

வவுனியா சண்முகபுரம், நேரியகுளம், ஒட்ராக்குளம்,செட்டிகுளம், முகத்தான் குளம் மற்றும் முதலியார்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.(ஜ-222)

# வீதிக்கு வந்த மக்கள்!

கொழும்பு,மார்ச் 24

வடக்கு மாகாணம் உள்ளிட்ட சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் நேற்று தளர்த்தப்பட்டதையடுத்து, நாட்டிலுள்ள பிரதான நகரங்களுக்குப் பெருமளவில் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

சதொச விற்பனை நிலையங்கள், வங்கிகள், சுப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் ஏனைய முக்கியமான சில வர்த்தக நிலையங்களில் மக்கள் கூடி நின்றதை அவதானிக்க முடிந்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன.

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், எச்சரிக்கை விடுத்தது டன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் ஆலோசனை வழங்கினர்.

பெரும்பாலான நகரங்களில் மக்கள் கைகளைக் கழுவுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நேற்று மதியம் 2 மணியுடன் பொலிஸ் ஊடரங்குச்சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படும் என்பதால் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகளே இடம் பெற்றன. (க)







# ஒரு மீற்றர் இடைவெளியை கடைப்பிடியுங்கள் மக்களே!

## வடக்கு கூட்டுறவு ஆணையாளர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மார்ச் 24**
**ஊரடங்குச் சட்டம் நாளை தளர்த்தப்படவுள்ள நிலையில், மக்கள் முண்டியடித்து பொருள்களைக் கொள்வனவு செய்யாது, ஒவ்வொருவருக்குமிடையில் ஒரு மீற்றர் தூர இடைவெளியைக் கடைப்பிடித்து நின்று பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தாக்கத்தின் அதிகரிப்பு காரணமாக நேற்று திங்கட்கிழமை வரை அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் வடக்கு மாகாணத்தில் மேலும் நீடிக்கப்பட்டு, இன்று காலையே தளர்த்தப்படுகிறது. மீண்டும் இன்று நண்பகல்12 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறான நிலையில் மக்கள் தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யவென வர்த்தக நிலையங்களில் முண்டியடித்து, நெரிசலுக்குள்ளாவார்கள். இதனை மக்கள் தவிர்க்க வேண்டும். அரசால் அறிவிக்கப்பட்ட இடைவெளியை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். வர்த்தக நிலைய ங்களில் குழுமி நிற்காது, எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கும், கொரோனாவை இல்லாதொழிப்பதற்கும், ஒருவருக்கொருவர் ஒரு மீற்றர் அளவு தூரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான பொருள்களை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் விரைந்து பெற்றுக்கொடுக்கப்படும் என்று ஆணையாளர் வாகீசன் மேலும் தெரிவித்தார். (ப)

## அவசர சேவையிலுள்ளோருக்கு
# எரிபொருள் விநியோக இடங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24
ஊரடங்குச்சட்டவேளையிலும் அவசர சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு தனியானஎரிபொருள்விற்பனை நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
வடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 5 எரிபொருள் விற்பனை நிலையங்கள் இதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவுஅபிவிருத்திஆணையாளர்பொ.வாகீசன்தெரிவித்தார்.
வலிகாமம் பிரதேசத்தில் உள்ளவர்கள்பண்டத்தரிப்பில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலை யத்திலும், தென்மராட்சியில் உள்ளவர்கள்சாவகச்சேரியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலை யத்திலும்,வடமராட்சியில்உள்ளவர்கள்கரவெட்டிநெல்லியடியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்திலும், யாழ்ப்பாண நகரிலுள்ளவர்கள் வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்திலும், தீவகத்தில் உள்ளவர்கள் ஊர்காவற்றுறையில் உள்ளபலநோக்குக்கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனைநிலையத்திலும் 24மணிநேரமும்எரிபொருள்நிரப்பிக்கொள்ளமுடியும் என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ.5)

## வரிசையில் நெருக்கம்
# 15 பேர் கைது

கொழும்பு, மார்ச் 24
ஊரடங்கு தளர்த்தப்படும் போது பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகளை பின்பற்றாத 15பேர் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
ஊரடங்கு தளர்த்தப்படும்போது வர்த்தக நிலையங்களில் ஒரு மீற்றர் இடைவெளியை மீறி வரிசையில் நெருக்கமாக நின்ற 15பேரே இவ்வாறு நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ஒ.5)

# வங்கியாளர்களுக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 24
வங்கி ஊழியர்கள் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள வேளையில் அனுமதி அட்டை இல்லாமல் தங்களது வங்கி அடையாள அட்டையை பயன்படுத்தி வீட்டுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
பதில் பொலிஸ் மா அதிபர் இதற்கு அனுமதி வழங்கியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ஒ.5)

## ஊரடங்கு தளர்த்தும் போது
# கடைப்பிடிக்க வேண்டிய பத்துக் கட்டளைகள்!

கொழும்பு, மார்ச் 24
ஊரடங்கு தளர்த்தப்படும் போது பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் குறித்து அரசு அறிவித்துள்ளது.
தேவை ஏற்படுமாயின் மாத்திரம் பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்துங்கள்.
முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் இரண்டு நபர்களுக்கு இடையில் 1 மீற்றர் இடைவெளி தூரத்தை பேணுங்கள்.
அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக உங்கள் வீட்டிலிருந்து மிக அருகில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு மாத்திரம் செல்லுங்கள்.
ஒரு வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வர்த்தக நிலை யத்துக்குச் செல்லுங்கள்.
வழங்கப்பட்டுள்ள மருத்துவ ஆலோசனைகளை தொடர்ந்து பின்பற்றுங்கள்.
வயோதிபர்களை வீட்டிலேயே தங்க வைக்கவும்.
பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களில் செலவிடும் நேர த்தில் நபர்களுக்கு இடையில் 1 மீற்றர் இடை வெளிதூரத்தைபேணுங்கள்.
பொருள்களை கொள்வனவு செய்யும் பொழுது வர்த்தக நிலையங்களில் செலவிடும் காலத்தை மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.
வர்த்தக நிலையங்களுக்குள் அதிகமானோர் உட்பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்துவதில் வர்த்தக நிலைய உரிமையாளர், முகாமையாளர், பாதுகாப்பு பிரிவினர் கவனம் செலுத்த வேண்டும்.
வெளியிடங்களுக்குச் சென்று மீண்டும் வீட்டுக்கு வரும் பொழுது வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடித்த பின்னரே வீடுகளுக்குள் பிரவேசியுங்கள். (ஒ.5)

## சார்க் நிதியத்துக்கு
# 5 மில்லியன் டொலர் இலங்கை அன்பளிப்பு
## கொரோனா ஒழிப்புக்காக

கொழும்பு, மார்ச் 24
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக நிறுவப்பட்டுள்ள சார்க் நிதியத்துக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்புச் செய்ய உறுதியளித்துள்ளார்.
இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மார்ச்15 ஆம் திகதி சார்க் அரச தலைவர்களுக்கிடையில் வீடியோ தொழிநுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த நிதியம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



# கொரோனா தொற்றாளியின் வீட்டுச் சூழலில் கிருமி நீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
தாவடியில் கொரோனா தொற்றுக்குள்ளானவரின் வீடு, அவர் நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் ஆலயப் பகுதி, அவரின் உறவினர்கள் வீடு என்பன நேற்று கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டன.
சுவிஸிலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஆராதனை நடத்திய மதபோதகரிலிருந்து அவரைச் சந்தித்த கட்டட ஒப்பந்தகாரருக்கு கொரோனா தொற்றியது. இதனையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலிருந்து கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்த நிலையில் தாவடியிலுள்ள அவரது வீடு மற்றும் அவர் நடமாடிய இடங்கள் என்பன நேற்றுக் காலை கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டன. கடற்படையினர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர். அந்தப் பகுதிப் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இந்த நடவடிக்கையில் இணைந்திருந்தனர். (ஒ.ப)

# முன்மாதிரியான செயற்பாடு

காரைநகர்,மார்ச் 24
கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து, மக்களைப்பாதுகாக்க சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவித்தல், காரைநகர்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
பிரதேசத்தில் உள்ள சங்கக் கடைகள் ஒரு மணித்தியாலம் நேற்றுத் திறந்து விடப்பட்டன. அங்கு வருகை தந்த மக்கள் சுகாதார நடைமுறைக்கு அமைவாக வரிசையில் நின்று பொருள்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இடைவெளி விட்டு அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் மக்கள் வரிசையாக நின்று பொருள்களைக் கொள்வனவு செய்தனர். முன் மாதிரியான செயற்பாட்டைப் பலர் பாராட்டியுள்ளனர். (க)



# உள்வீதியில் தேர்த்திருவிழா

காரைநகர்.மார்ச் 24
காரைநகர் மணற்காடுகும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத் தேர்த்திருவிழா. மிக அமைதியாக உள்வீதியில் நேற்று நடைபெற்றது.
ஆலய மகோற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த சனிக்கிழமை தொடக்கம் உள்வீதியில் மிக அமைதியான முறையில் உற்சவங்கள் நடைபெற்று வந்தன.
தொடர்ந்து நேற்று இரதோற்சவத் திருவிழாவில் அம்பாளின் பிரதான தேர் இழுக்கப்படவில்லை. எனினும் உள்வீதியில் அமைதியான முறையில் சிறிய தேர் இழுக்கப்பட்டது.
எனினும் கொரோனா அச்சம் காரணமாக பத்தர்கள் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆலய குருமார்களுடன் உள்வீதியில் தேர்த்திருவிழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.(க-250)



# வவுனியா நகரில் தூய்மைப் பணி

வவுனியா.மார்ச் 24
கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து, வவுனியா நகரைப் பாதுகாக்கும் நோக்குடன் நகர்ப்பகுதி நேற்றுச் சுத்தகரிப்புச் செய்யப்பட்டது.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையைத் தொடர்ந்து, வடக்கு மாகாணம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. வடக்குக்கான போக்குவரத்து வீதிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.
இந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வவுனியா நகர சபைத் தவிசாளர் கௌதமனின் நேரடி வழிகாட்டலில், வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளை நகரசபை தொழிலாளர்கள் நேற்றுச் சுத்திகரிப்புச் செய்தனர்.(க-110)



### தனியார் மருந்துவமனைகளிலும்
# உச்சக்கட்ட சோதனைகள்

**யாழ்ப்பாணம், மார்ச் 24**
**கொரோனாவின் தாக்கத்தைத் தொடர்ந்து தனியார் மருந்துவமனைகளிலும் உச்சக்கட்டச் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளர்கள் உடல் வெப்பநிலை அவதானிப்பின் பின்னர் பதிவேடுகளில் தமது பதிவுகளை மேற்கொண்ட பின்னரே மருத்துவமனைகளுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.
மருத்துவமனைகளின் வளாகங்களுக்குள் பிரவேசிக்கும் முன்னர் கைகளைக் கழுவுவதற்கான ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. (ம)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய இளைஞர்கள் அறுவர் கைது

கிளிநொச்சி.மார்ச் 24
நாட்டில்நிலவியுள்ளஅசாதாரண சூழ்நிலையின் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது, விதிகளை மீறிய குற்றச்சாட்டில், கிளிநொச்சி நகர்ப்பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
கிளிநொச்சி நகர்ப் பகுதியில்வைத்து இரவு 7 மணியளவில்அறுவரும்கைது செய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஊரடங்குச் சட்டம் அமுலில்உள்ளபோது, அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவும், தவறும் பட்சத்தில் கைது நடவடிக்கைகள் தொடரும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (க-35)

# தனி மனித உயிர் பாதுகாப்பு தேர்தலை விடவும் முக்கியம்
### மகிந்த தேசப்பிரிய அறிவுரை

கொழும்பு, மார்ச் 24
ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகியுள்ள அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் அரசியல் பரப்புரைகளை மேற்கொள்வதை தவிர்த்து கொரோனா தொற்றுக்கு எதிராகப் போராடுங்கள். தேர்தலை விடவும் மனித உயிர் பாதுகாப்பு மேலானது.
இவ்வாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு பின்னரான நாட்டின் நிலைமையை மையமாகக் கொண்டே தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடுவது பற்றி கரிசனை செய்யும்.
மே 14 ஆம் திகதிக்கு பின்னரே பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படும். கொரோனா வைரஸ் விடயத்தை மையப்படுத்தி சில அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் பொருள்களை, சேவைகளை வழங்கும் போர்வையில் அரசியல் பரப்புரைகளை மேற்கொள்வதாக எமக்கு சில தகவல்கள் கிடைத்துள்ளன.
அவ்வாறான நடவடிக்கைகளை கைவிட்டு



அனைத்து அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் கொரோனா வைரஸை நாட்டை விட்டு அகற்றுவதற்காக போராட வேண்டும். தேர்தலை விடவும் மனித உயிர் பாதுகாப்பு மேலானது- என்றார். (ஏ)

# யாழில் 88 ஆயிரம் பேருக்கு உணவுப் பொருள்கள் தேவை
### முன்னாள் எம்.பி அங்கஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 24
யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 88 ஆயிரம் பேருக்கு உணவு உள்ளிட்ட உதவிகள் வழங்க வேண்டிய தேவை இருக்கிறது என்று முன்னாள் நாடளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான இ.அங்கஜன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று உள்ளவரென ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். சுவிஸ் போதகரின் ஆராதனைக்குச் சென்றவர்கள் 209 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களால் குடும்பங்களுக்கும் கொரோனாத் தொற்று வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் 18 குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன. அவர்களுக்கான தனிமைப்படுத்தல் முகாம் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் தல்சவனப் பகுதியில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இவர்களுக்கான உணவுகளை வழங்குவதற்கு மாவட்டச் செயலகத்தின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இடர் முகாமைத்துவப் பிரிவின் ஒரு மில்லியன் ரூபாவை இதற்கு விடுவிக்குமாறும் அமைச்சரை கோரியுள்ளோம். இந்த நிலை எவ்வளவு காலம் தொடரும் என்பது தெரியாது.
ஆகவே மூன்று மாத காலத்துக்கு அன்றாடம் கூலி வேலையை நம்பி, மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு உணவுப் பொதி ஒன்றை நாடு முழுவதும் வழங்குவதற்கு ஜனாதிபதியின் வறுமை ஒழிப்புச் செயலணியூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தனி ஒருவர் உள்ள குடும்பத்துக்கு 900 ரூபா பெறுமதியான உணவுப் பொதியும், 5 பேர் உள்ள குடும்பத்துக்கு 2 ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான உணவுப் பொதியும் கொண்ட அத்தியாவசிய உணவுப் பொதிவழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது. 88 ஆயிரம் குடும்பங்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்க வேண்டிய தேவையுள்ளது. இடம்பெயர்ந்தோர் , மீனவக் குடும்பம், சுயதொழில் மேற்கொள்வோர் , விவசாயிகள் உள்ளிட்ட பலருக்கு இந்த உதவி வழங்க வேண்டிய தேவை உள்ளது.
இது தவிர 30 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மா கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்படவுள்ளது. கிராம அலுவலர்கள் ஊடாக இராணுவத்தினரின் உதவியுடன் தேவைப படுவோருக்கு கோதுமை மா வழங்கப்படவுள்ளது- என்றார். (ப-7)

# யாழ்ப்பாணத்தில் நிவாரணம் ரூ. 400 மில்லியன் தேவை

## தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு முன்னுரிமை

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கென இடர்முகாமைத்துவ அமைச்சின் ஊடாக ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதும், எழுத்துமூல அனுமதி நேற்று மாலை வரையில் மாவட்டச் செயலகத்துக்கு கிடைக்கவில்லை என்று தெரியவருகின்றது.**

இதேவேளை தொடர் ஊரடங்குச் சட்டம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அன்றாடத் தொழில் செய்வோர் உள்ளிட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோராக 64 ஆயிரம் குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

ஒரு அங்கத்தவருடைய குடும்பத்துக்கு வாராந்தம் 900 ரூபா பெறுமதியான பொருள்களும் மாதாந்தம் 3 ஆயிரத்து 600 ரூபாய் பெறுமதியான பொருள்களும் வழங்கப்படவேண்டும். இரண்டு அங்கத்தவருடைய குடும்பத்துக்கு வாராந்தம் ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான பொருள்களும் மாதாந்தம் 4 ஆயிரத்து 800 ரூபாய் பெறுமதியான பொருள்களும் வழங்கப்படவேண்டும். மூன்று அங்கத்தவருடைய குடும்பத்துக்கு வாராந்தம் ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான பொருள்களும் மாதாந்தம் 4 ஆயிரத்து 200 ரூபாய் பெறுமதியான பொருள்களும் வழங்கப்படவேண்டும்.

நான்கு அங்கத்தவருடைய குடும்பத்துக்கு வாராந்தம் ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான பொருள்களும் மாதாந்தம் 5 ஆயிரத்து 600 ரூபாய் பெறுமதியான பொருள்களும் வழங்கப்படவேண்டும். ஐந்து அங்கத்தவருடைய குடும்பத்துக்கு வாராந்தம் ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொருள்களும் மாதாந்தம் 7 ஆயிரத்து 200 ரூபாய் பெறுமதியான பொருள்களும் வழங்கப்பட வேண்டும்.

எனவே யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 407.356 மில்லியன் ரூபா நிதி முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யுமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ஊடாக வறுமை ஒழிப்புச் செயலணியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த பொதியில் அரிசி, மா, சீனி, ரின்மீன், பருப்பு, சவர்க்காரம் உட்பட 14 அத்தியாவசிய பொருள்கள் உள்ளடக்கப்படவுள்ளன. (ஒ.5)

## தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரை கண்காணிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரியாலையில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருடன் தொடர்புடைய 192பேர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்த ஆயிரத்து 537 பேர் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றைய ஊரடங்கு தளர்வு நேரத்திலும் வெளியேறாமல் கண்காணிக்க இராணுவம் மற்றும் பொலிஸிடம் சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்து ள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் 14 நாள்கள் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு ஆயிரத்து 537 பேர் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர். அவர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனை விட, சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் அரியாலையில் நடத்திய ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்ற 192பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் தாவடியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்புகளைப் பேணியவர்களும் அவர்களது வீடுகளுக்குள்யே தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இன்று ஊரடங்கு தளர்த்தப்படும்போது அவர்கள் வெளியே நடமாடக்கூடிய சாத்தியம் இருப்பதால், தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீடுகள் கண்காணிப்புக்கு இராணுவம் அல்லது பொலிஸாரை நியமிக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது. (ஒ.5)

## இலங்கையில்..

தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இந்த நிலைமை ஏற்படும் என்று மருத்துவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மருத்துவர்களால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலுக்குரிய விடயமாக கொரோனா தொற்று மாறியுள்ளது. இலங்கையிலும் கொரோனா தொற்றுக்கு இலக்கான 97 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று பரவும் வீதம் தொடர்பான வரைபு உலகின் ஏனைய நாடுகளில் பரவும் வீதம் தொடர்பான வரைபுடன் அச்சொட்டாக ஒத்துப் போகின்றது. இப்படியே சென்றால் இன்னும் இரண்டு வாரங்களில் இலங்கையில் 20 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காவார்கள். அவ்வாறு நடக்கக் கூடாது என்பதுதான் எங்களின் விருப்பம். உரிய தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இந்த நிலைமை நிச்சயம் ஏற்படும் என்று மருத்துவர்கள் அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள். (ஒ.5)

### அநுராதபுரத்திலிருந்து

# பத்து அரசியல் கைதிகள் யாழ். சிறைக்கு மாற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 24.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 13 பேரில் 10 பேர் நேற்றிரவு யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இந்தத் தகவலை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜயசிறி தென்னக்கோன் நேற்றிரவு தன்னிடம் அறிவித்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“கொரோனாவைரஸ்பீதியையடுத்து அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அங்குள்ள உண்மை நிலையை அறிந்துகொள்ளும் வகையிலும், தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கு டனும் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்றிருந்தேன்.

அங்கு இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பான விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் இடம்பெறுவதால் தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட முடியாது எனச் சிறைச்சாலைகள் அத்தியட்சகர் என்னிடம் தெரிவித்தார். தமிழ் அரசியல் கைதிகள் 13 பேருக்கும் எந்தவொரு பாதிப்பும் இல்லை என்பதைத் தன்னால் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் என்னிடம் கூறினார்.

இதனையடுத்து குறித்த விடயத்தை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜயசிறி தென்னக்கோனின் கவனத்துக்குக் கொண்டு சென்று இவ்வாறான அசாதாரண நிலைமைகள் காரணமாகவே தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு நாம் நீண்டகாலமாகக் கோருகின்றோம் என்பதை சுட்டிக்காட்டினேன்.

அதனை ஆராய்வதாகத் தெரிவித்த ஆணையாளர் சிறிது நேரம் தாமதித்து தொடர்பு கொண்டு குறித்த கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அதற்கமைய நேற்றிரவு என்னைத் தொடர்புகொண்ட அவர், 13 கைதிகளில் 10 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகின்றனர். அவர்களை ஏற்றிய சிறைச்சாலை பஸ் யாழ்ப்பாணம் சிறைச்சாலை நோக்கிப் புறப்பட்டு விட்டது. எஞ்சிய 3 கைதிகளும் கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர் என்று கூறினார்” என்றார். (22.105)

### கொரோனாவால் பாதிக்கப்பட்ட

# முதலாவது இலங்கையர் வீடு திரும்பினார்

கொழும்பு, மார்ச் 24

கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் சிகிச்சையின் பின்னர் நலம் பெற்று நேற்று வீடு திரும்பினார்.

இத்தாலி நாட்டவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டியாகச் செயற்பட்ட குறித்த நபர் கொழும்பு தொற்றுநோயியல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். நலம் பெற்ற அவர் நேற்றுத் தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார். இரண்டு வாரச் சிகிச்சையின் பின்னர் அவர் நலம்பெற்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# சமுர்த்தி பயனாளிகளுக்கு முற்பணமாக ரூ. 10 ஆயிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு சமுர்த்திப் பயனாளிகளுக்கு முற்பணமாக 10 ஆயிரம் ரூபா நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீர் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் குறித்த கொடுப்பனவை கொரோனா வைரஸின் தாக்கம் முழுமையாக அகன்ற பின்னர் அதை அவர்களிடமிருந்து மீளப் பெறுவதா? அல்லது நிவாரணமாக வழங்குவதா என்பது தொடர்பில் துறைசார் தரப்பினருடன் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மகோற்சவம் பிற்போடல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

எதிர்வரும் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த, சங்கரத்தை - பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து பிற்போடப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நம்மை நாமே பாதுகாப்போம்

மிகப்பெரும் பேரிடருக்குள் ஒட்டுமொத்த இலங்கையும் சிக்கி, ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. தொடர் ஊரடங்குச் சட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாகக் குலைந்துள்ளது. போர்க்காலத்தில் கூட இப்படி மக்கள் அச்சப்பட்டது கிடையாது. ஆனால் இப்போது எல்லோர் முகங்களில் சந்தேகமும், அச்சமுமே படரத் தொடங்கியுள்ளன. அந்தளவுக்கு கொரோனா தன் வேலையை மிகப் பலமாகவே இந்தச் சின்னஞ்சிறிய நாட்டின் மீது காட்டிவருகின்றது. நேற்றோடு 97 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அடுத்து வரும் நாள்களில் இந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. கொரோனா ஒரு நபர் மூலம் 403 பேருக்கு பரவக்கூடிய வாய்ப்புள்ளதால், போதிய முன்னெச்சரிக்கை இல்லாவிடின் அடுத்துவரும் இரு வாரங்களில் இலங்கையில் 20 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்படக்கூடும் என்ற எச்சரிக்கையை மருத்துவர்கள் விடுத்துள்ளார்கள்.

இந்த எச்சரிக்கை அலட்சியப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. ஏற்கனவே கொரோனா இலங்கை போன்ற அதியுச்ச வெப்பநிலை கொண்ட நாட்டுக்கு வராது என்ற அசட்டுத்துணிவில் இருந்தமையால் தான் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறியிருந்தது. கொரோனா என்பது வெளிநாட்டு நோய் , அது இலங்கைக்கு வராது என்ற மாயையை முதலாவது கொரோனாத் தொற்றாளி தகர்த்தார். அந்தக் கணமே இலங்கை முழுதும் அதிர்ந்து, சுதாகரிப்பதற்குள் கண்மூடித் திறப்பதற்குள் கொரோனா மூர்க்கத்தனமாகத் தாக்கத் தொடங்கி விட்டது. தினமும் இனம்காணப்படும் கொரோனாத் தொற்றாளிகளின் எண்ணிக்கையை வைத்துச் செய்யப்பட்ட வரைபில் ஒருகட்டத்தில், அதிகளவான உயிர்களைப் பலிகொடுத்து வரும் இத்தாலியை விட இலங்கை ஒப்பீட்டளவில் உயர் எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. ஆயினும் இப்போது அந்த வரைபில் இத்தாலியை விட கீழிறங்கிவிட்டாலும் , இன்னும் ஆபத்து அகலவில்லை.

அப்படியாயின் எப்படி இந்தக் கொரோனா என்னும் கொடுமையில் இருந்து நாம் தப்பிக்க முடியும்? என்ற அவநம்பிக்கை எல்லோரிடையேயும் தோன்றவும் கூடும். ஆனால், ஒவ்வொரு பிரஜையும் மனம் வைத்தால் கொரோனா என்பது மிகச் சாதாரணமான ஒன்றாகி, இலங்கையில் இருந்தே காணாமல் போகக்கூடும். உலகின் அதிக சனத்தொகை கொண்ட, கொரோனாவின் பிறப்பிடமான சீனா, மிகச் சாதுரியமான எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கையாண்டதன் பயனாக இப்போது முற்றுமுழுதாக கொரோனாவில் இருந்து மீண்டு விட்டது. சீனாவின் நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் ஊடாக நாமும் கொரோனாவில் இருந்து விடுபட முடியும். சீனா கையாண்ட முக்கியமான நடவடிக்கைகளில் தனிமைப்படுத்தல், இடைவெளி பேணல், கைகளைக் கழுவி சுத்தமாக இருத்தல், நோய் அறிகுறி தென்படின் உடனடியாகவே மருத்துவமனைக்கு செல்லல், வீதிகளில் நடமாடத் தடை, முகக்கவசம் அணிதல் என்பன முக்கியமானவை. ஏறக்குறைய அதே வகையிலான பாதையில் இலங்கை பயணித்தாலும், ஊரடங்குக்காக வீட்டில் இருந்தாலும், இன்று ஊரடங்கு சற்றுத் தளர்த்தப்பட்டதும் கும்பலாகப் புறப்பட்டு, ஒரு செயற்கை நெரிசலை உருவாக்கி, கொரோனா தொற்றுவதற்குரிய ஏது நிலையை நாமே அமைக்கும் கைங்கரியத்தையும் செய்திருப்போம்.

வெறும் இரு வாரங்களுக்கு நம்மை நாமே இயன்றளவு சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்துவதன் மூலம் நாமும் பாதுகாப்பாக இருப்பதோடு, நம்மைச் சார்ந்தவர்களையும், சமூகத்தையும், நாட்டையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். செய்வோமா?

# கொரோனா பாதிப்பு கோத்தா நிவாரணம்

- பட்டதாரி பயிலுநர்களுக்கு சம்பளம்
- சமுர்த்தி பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா
- லீசிங், கடன் அறவீடு தற்காலிகமாக நிறுத்தம்
- கொரோனா ஒழிப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு காப்புறுதி இரு மடங்கு

கொழும்பு, மார்ச் 24

கொரோனாவைரஸ்பரவலின் காரணமாக அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளமக்களுக்காகதனக்குவழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ்பல்வேறு நிவாரணங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அனைத்து நிவாரணங்களும் நேற்று முதல் நடைமுறைக்கு வரும்என்றுஜனாதிபதிஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிவாரணங்களை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மத்திய வங்கி ஆளுநர், அனைத்து அமைச்சுக்களின் செயலர்கள், மாகாண சபை தலைமை செயலர்கள்மற்றும்அனைத்து வங்கி, நிதிநிறுவனமற்றும்வரி நிறுவன தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

வருமான, வற்வரி, சாரதிஅனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கான கட்டணங்கள், ரூ 15 ஆயிரத்துக்கு குறைந்த நீர், மின்சார கட்டணங்கள், வரிகள், வங்கி காசோலைகள் செல்லுபடியாகும் கால எல்லை, ரூ 50 ஆயிரத்துக்கு குறைந்த மாதாந்த கடனட்டை கொடுப்பனவுகள், ஏப்ரல் மாதம்30ஆம்திகதிவரைநீடிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் லீசிங் கடன் தவணைக் கட்டணம் அறவிடுவது 6 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களினதும் தனியார் துறை பணிக்குழாம் அல்லாத ஊழியர்களினதும் சம்பளத்தில் கடன் தவணை கட்டணங்கள் அறவிடுவது மே மாதம் 30 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வங்கி, நிதி நிறுவனங்களால் ரூ.10 லட்சத்துக்கும் குறைவானதனிப்பட்டகடன்அறவிடுவது 3 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொழில் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு, மார்ச் மாத பயிற்சிக் காலகொடுப்பனவான ரூ.20 ஆயிரம் அவர்களது வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

கொரோனாவைரஸ்ஒழிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார, பொலிஸ், சிவில் பாதுகாப்பு உள்ளிட்டஅரசஊழியர்களுக்கான அக்ரஹார காப்புறுதி நன்மைகள்இரண்டுமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா, ஆடை, சிறியமற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக6மாதகடன்நிவாரண காலத்தை நடைமுறைப்படுத்துதலும் இலங்கை மத்திய வங்கி அந்நிதியை மீள்நிதியாக்கம்செய்தலும்.

இலங்கைவங்கி, மக்கள்வங்கி, தேசியசேமிப்புவங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் இணைந்து திறைசேரி பிணைமுறிகளில்நிதிமுதலீடு செய்கையில், அதன் மூலம் நிதிச் சந்தையை 7வீத வட்டி விகிதத்தின் கீழ் நிலைப்படுத்தல்.

மாதாந்த கடன் தொகையை ரூ.50 ஆயிரம் வரையான தேசிய கொடுக்கல் வாங்கலுக்காகபயன்படுத்தப்படும்கடனட்டைக்கானகடன்வட்டிவீதத்தை அதிகபட்சம் 15வீதத்தின் கீழ் கொண்டு வருதலும் ஆகக்குறைந்தமாதாந்தஅறவீட்டை 50வீதமாக குறைத்தலும்.

சமுர்த்தி நன்மை பெறுபவர்கள், சமுர்த்தி அட்டை உரிமையாளர்களுக்கு ரூ. 10 ஆயிரம் வட்டியில்லாத முற்பணத்தை அனைத்து சமுர்த்தி வங்கிச் சங்கங்களின்ஊடாகவும்பெற்றுக்கொடுத்தல்.

சதொச, கூட்டுறவுமொத்தவிற்பனை நிலையங்கள் வற் வரி மற்றும் ஏனைய பிரதேச வரிகள், கட்டணங்களில் இருந்து விலக்களித்தல்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கான போசனை உணவு பொருள்களை வழங்குவதற்காக சமுர்த்தி அதிகார சபை சமுர்த்தி, குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களுக்கான உணவு அட்டைகளை உடனடியாக வழங்கவேண்டும். அக்குடும்பங்களுக்கு முதியவர்கள், குறைந்தவருமானம் பெறுவோருக்கு அரிசி, பருப்பு, வெங்காயம் ஆகியன உணவு அட்டையின் ஊடாக வாராந்தம்வழங்க வேண்டும்.

இந்தத்தீர்மானங்களைஉடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில்ஜனாதிபதியின் செயலர் உரிய அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (ஒ.5)

உணவுப் பொருள் விநியோகம்

# ஊரடங்கு நேரத்திலும் லொறிகளுக்கு அனுமதி

மாவட்டச் செயலர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், மார்ச் 24

அத்தியாவசிய சேவையில் ஒன்றான உணவுப் பொருள் விநியோகத்தை ஊரடங்கு வேளையிலும் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச்செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றைய தினம் பல லொறிகள் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு கொழும்புக்குச் சென்றதாகவும், சில லொறிகளை பாதுகாப்புத் தரப்பினர் மறித்தமை தொடர்பில் மாவட்டச் செயலருக்கு பிரதேச செயலர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து மாவட்டச் செயலர், இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடி அதனை சீர் செய்துள்ளார்.

'உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு ஊரடங்கு நேரத்திலும்லொறிகளுக்கு அனுமதி வழங்கபட்டுள்ளது. அவர்கள் கொழும்புக்கு பொருள்களை ஏற்றச் சென்றுள்ளனர். மேலும், யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகள் திரும்பிச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று அனுமதியைப் பெற்று பயணத்தை மேற்கொள்ளலாம்' என்று மாவட்டச் செயலர் க.மகேசன் குறிப்பிட்டார். (ஒ.5)

# கொரோனா: வல்லரசுகளின் உயிரியல் அணுகுண்டு!






■ நோக்கரிய நோக்கன்

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) ஜெனிவா தலைமையகம் 2018 பெப்ரவரி மாதத்தின் நாளொன்றில் அதன் வருடாந்தக் கூட்டத்துக்காக தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்கள் நிறைந்து காணப்படுகிறது. வழமையான வருடாந்தக் கூட்டம் போலல்லாமல், வைரஸ் நுண்ணுயிரியலாளர்களும் நிபுணர்களும், கண்டங்களையும் நாடுகளையும் பிரதிநிதித்து வப்படுத்தி, அன்றைய தினம் ஜெனிவாவுக்கு வருகை தந்திருந்தனர். முறைப்படியாக மாநாடு ஆரம்பமாவதற்கு முன்பாக இருவர் மூவராக தமக்கிடையே ஏதோ ஏதோ ஆர்வத்துக்குரிய விவகாரங்களை 'குசுகுசுத்துக்' கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் வருடாந்த மாநாடு தொடங்கிவிட்டது. வெவ்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த நுண்ணுயிரியல் நிபுணர்கள், தொற்று நோய் நிபுணர்கள், தொற்றா நோய் நிபுணர்கள், மருத்துவ நிபுணர்கள், வெவ்வேறு உலகப் பிராந்தியங்களின் நோய் நிலைமைகளைச் சமாளிப்பதற்கான அல்லது தடுப்பு முறைமைகளுக் கபன, திட்டங்களுக்கான செலவுகளைத் தயாரிக்கும், மதிப்பிடும் உலக சுகாதார நிறுவனத்தின் நிதி முகாமைத்துவ நிபுணர்களுடன் உலக சுகாதார நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் நிபுணத்துவ நிலை அதிகாரிகள் அங்கு தத்தமது நிலவர அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள், திட்ட மதிப்பீட்டு அறிக்கைகள், ஆய்வறிக்கைகள் முதலியவற்றைச் சம்பிரதாயபூர்வமாக ஏற்கனவே வருடாந்த மாநாட்டுக்காகச் சமர்ப்பித்திருந்தனர்.

வருடாந்த மாநாட்டில் உலகை அச்சுறுத்தி உலுப்பக்கூடிய, மனித இனத்தை அழிக்கக்கூடிய நோய்களின் விபரப்பட்டியலை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டது. "கிறீமியன், ஹொய்கோ காய்ச்சல், எபோலோ வைரஸ் நோய், றிவ்ற் பள்ளத்தாக்குக் காய்ச்சல், லாசாக் காய்ச்சல், சார்ஸ், நிபா வைரஸ், ஜிகா வைரஸ்" ஆகிய நோய்க் கிருமிகள் மட்டுமல்ல "எக்ஸ்" வைரஸ் எனும் பெயரிலும் ஒரு வைரஸ் அங்கே அறிவிக்கப்பட்டது. இவ்வாறு ஏற்கனவே இல்லாத ஒரு வைரஸ் கிருமிக்கு "எக்ஸ்" எனப் பெயரிடப்பட்டு, எதிர்காலத்தில் உலகுக்கு அந்த வைரஸ் பேரழிவை ஏற்படுத்தும் என்பது 2018 இல் கோடி காட்டப்பட்டமை பற்றி இப்பொழுது விடயமறிந்த வட்டாரங்கள் சர்ச்சிக்கின்றன.

இப்பொழுது ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, அமெரிக்கா எனும் ஐந்து பெருங் கண்டங்களையும் அழிவுக்கு உள்ளாக்கும் கொரோனா வகை வைரஸான "கொவிட் 19" எனப் பெயரிடப்பட்ட, சர்வதேச அளவில் பெரும் நோய்த்தொற்றை ஏற்படுத்தும் இந்த வைரஸ் "எக்ஸ்" வைரஸ் தானா? எனும் கேள்வி சர்வதேச விவகாரங்களைத் தொடர்ந்து இடையறாது அவதானிப்பவர்களுக்கு ஏற்படுகிறது. அல்லது கொவிட் 19 எனும் கொரோனா வைரஸை விட, இன்னுமொரு வைரஸ் பரம்பல் இனிமேல் ஏற்படலாம் என ஐ.நாவின் உலக சுகாதார நிறுவனம் எதிர்பார்த்திருக்கிறதா?

சரி, அவ்வாறோ...... இவ்வாறோ....... ஒரு சந்தேகம் உலக சுகாதார நிறுவனத்துக்கு அல்லது அதன் நிபுணர்களுக்கு ஏற்பட்டிருக்குமானால், அது அல்லது அவர்கள் ஏன் உலக அரசாங்கங்களுக்கு அது பற்றிய தெளிவான தகவல்களைப் பரிமாறவில்லை? இனிவரும் காலங்களிலும் அந்த நிறுவனம் உலகப் பெருந் தொற்றுநோய்கள் தொடர்பாக, இவ்வாறாகக் 'கண்டும் காணாத' நடத்தைக் கோலங்களையா காட்டும்? அந்த நிறுவனம் யாருக்காவது அல்லது யாரோ சிலரது அல்லது ஏதோ ஒரு 'ஒற்றை' வல்லரசின் கைக்கூலியாக எப்போதோ தொடக்கம் இயங்கி வருகிறதா?

முன்னாள் சோவியத் யூனியனின் காலத்தில் அதன் பாதுகாப்புப் புலனாய்வுக் கட்டமைப்பில் சிரேஷ்ட நிலைப் புலனாய்வு அதிகாரியாகவிருந்து, பின்னர் 1990 களின் முற்பகுதியில் சோவியத் யூனியனும் அதன் கம்யூனிஸ சித்தாந்த நடைமறைகளும் வீழ்ச்சி கண்ட பின்னர் உருவான, புதிய பல நாடுகளில் ஒன்றான ரஷ்யாவின் தலைவராக, அரசியலுக்குள் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட, தற்போதும் ரஷ்யாவின் ஜனாதிபதியாகவிருக்கும் விளாமிடிர் புடின் எனும் "இராணுவப் புலனாய்வுவாதி" முன்கூட்டியே "வைரஸ்" வடிவத்தில் "மூன்றாம் உலகப் போரை" உயிரியல் ஆயுதங்களின் உதவியுடன் எதிர்பார்த்தாரா? ஏனென்றால், சீனாவில் கொரோனாவின் உச்சத் தாண்டவம் ஊழிக்கூத்து தொடக்கப்பட முன்னரே, இவ்விடயத்தில் ரஷ்ய ஜனாதிபதி 'அலேர்ட்' ஆகியிருந்தமை புலப்படுகிறது.

சீனாவில் கொரோனா அமளிதுமளி ஏற்படத் தொடங்கிய ஓரிரு நாட்களுக்குள் புடின் ரஷ்ய எல்லைகளை முற்றாக மூடினார். விமானப் போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்தி முகாமைத்துவம் செய்தார். தன்னுடையதும், ரஷ்யப் புலனாய்வு அதிகாரிகளினதும், ரஷ்ய விஞ்ஞானிகளினதும், ரஷ்ய கொம்யூனிஸக் கட்சி முக்கியஸ்தர்களினதும் பாதுகாப்பை இந்த 'உயிரியல் அணுகுண்டிலிருந்து' முற்றாகப் பாதுகாத்துக் கொண்டார். சில நாட்களுக்கு முன்பு ரஷ்யத் தொலைக்காட்சி (ஆர்.ரி), கொரோனோ வைரஸ் தொடர்பான பரபரப்பூட்டும் காணொளிகளையும், ஆரவாரங்களையும், செய்திகளையும் வெளியிட்டிருந்தது. அதில் பேசிய சில ரஷ்ய சார்பு நிபுணர்கள், வல்லரசொன்றின் மீது விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்த னர்.

எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு ஒளிந்திருக்கிறதோ தெரியவில்லை. 'முத்திப் பழுத்த புலனாய்வு நிபுணராக' இருந்து தற்போதைய ரஷ்ய ஜனாதிபதியாகவிருக்கும் விளாடிமிர் புடின் ஏதோ 'ஒரு சில' வல்லரசுகளின் வர்த்தகப் போரின் போட்டாபோட்டியின் விளைவாக ஏதாவது 'திருவிளையாடல்கள்' அரங்கேறலாம் என நினைத்து, தன்னையும், தனது ஆளணி அம்புகளையும், தனது நாட்டு மக்களையும், தனது நாட்டின் இறைமை யையும் காப்பாற்றும் வகையில் சகல முற்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனித்து கனகச்சிதமாகச் செயற்பட்டுள்ளார் என்பது தெட்டத் தெளிவாகிறது.

"நோக்கரிய நோக்கை", "நுணுக்கரிய நுண்ணுணர்வை"ப் பாவித்து இப் பத்தி எழுத்தாளர், இவ் விடயம் தொடர்பாக இத்தருணம் வரை திரட்டிய தகவல்களின் அடிப்படையில், ரஷ்யாவில் கொரோனோ வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை வெறும் 87 பேரே என்றும், அங்கே உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் சர்வதேச ரீதியில் நம்பத்தகுந்த செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. சீனாவில் ஆயிரக்கணக்கான அப்பாவிச் சீனப் பிரஜைகளின் உயிர்களைக் காவு கொண்டதோடு மட்டுமல்லாது, அந்த நாட்டின் உற்பத்தித்துறையையும், வர்த்தகப் பரிமாற்றங்களையும் முடக்கியது கொரோனா. பின்னர் சீனாவின் 'ஓரளவான' நட்பு நாடாக இப்பொழுது விளங்கும் ரஷ்யாவை 'மெல்ல' எட்டிப் பார்த்துவிட்டு, அப்பால் விலகி ஐரோப்பிய நாடுகளைச் சூழ்ந்து கவ்வி, அப்பாவி ஐரோப்பிய மக்களைக் காவு கொள்ளத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே எயிட்ஸ் நோயினால் அழிந்து கொண்டிருக்கும் கண்டமான ஆபிரிக்காவையும், எண்ணெய் வளம்மிக்க மத்திய கிழக்கையும் கொரோனோ தாக்கத் தொடங்கியுள்ளது. எயிட்ஸ் மட்டுமல்ல ஆபிரிக்க நாடுகளில் போஷாக்கின்மையும், ஆபிரிக்க கறுப்பு மனிதர்கள் மத்தியில் நோய் எதிர்ப்பு சக்தியின்மையும் பயங்கரமாக உள்ளன. ஆபிரிக்கக் கண்டம் இவ்வாறான கொரோனோ வைரஸை எதிர்கொண்டு போராடும் ஸ்திரப்பாடு இல்லாத நிலையிலேயே உள்ளது. அதே போல பிரேசில் உள்ளிட்ட தென்னமெரிக்க நாடுகளையும் இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் இவ் வைரஸ் தாக்கத் தொடங்கியுள்ளது.

ஒரு பொது அறிவுள்ள எந்தவொரு சாதாரண பிரஜையும் விளங்கிக்கொள்ளக் கூடிய விடயம், சீனாவின் 'ஒரு பட்டி ஒரு பாதை 'எனும் மூலோபாயத் திட்டத்தை வரவேற்ற, அதற்குள் பங்காளிகளான நாடுகளின் மனித வளமும், பொருள் உற்பத்தித்துறையும், சேவைத் துறையும், வர்த்தகமும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அதேவேளை "தகவல் சிதைப்பு" வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடுமோ என் ஐயம் எழும் வகையில் ஒரு செய்தியை மேற்கத்திய ஊடகங்கள் வெளியிட்டன. கிட்டத்தட்ட அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களிலும் கொரோனோ தொற்றியுள்ளது என்பதே அது.

கொரோனோ வைரஸ் தொடர்பாக அமெரிக்க வட்டாரங்களிலும் ஒருசில சதிக்கோட்பாடுகள் சில தினங்களுக்கு முன்பு வெளியாகின. இந்தப் பத்தி எழுத்தாளரைப் பொறுத்த வரை அத்தகைய எதிரும் புதிருமாக ஊடகங்களையும் எதிர்ப் பிரசாரங்களையும் பரிசோதித்து ஏதாவது ஒரு முடிவுக்கோ(?) கோட்பாட்டு நிறைவுக்கோ வருவது மிக மிகக் கடினம். எதையும் அறுதி இறுதியாக இப்போதைக்கு மட்டுமல்ல எப்போதைக்கும் கூறிவிட முடியாது.

இப் பத்தி எழுத்தாளரிடமும் ஏனையோர் போல, சற்று தனக்குத் தானே நம்புகின்ற ஒரு ஊகம் உள்ளது. அது என்னவென்றால், 'கொரோனோ' என்பது "ஏதோ ஒரு சில வல்லரசுகள் மட்டுமே தெரிந்து வைத்திருக்கும் ஒரு உயிரியல் ஆயுதப் போர்" என்பதாக 'இருக்கும்', அல்லது 'இருக்கலாம்', அல்லது 'இருக்கக்கூடும்'.

உலகப் பொதுவேதம் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

***"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"***

ஆனால் இங்கே ,

**"அரிது அரிது ஆய்வுரையாளர் அரிது
அதனிலும் அரிது 'கொவிட் 19' இன் உற்பத்தி
மூலத்தை அறிதல்"** ■

# "கொரோனா" உளநலனை பாதுகாப்பது எப்படி?

மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்

கொரோனா தொற்றுநோய் உலகெங்கும் பரவி வரும் நிலையில் எதிர்காலம் பற்றிய கவலைகளும் தொடர்ச்சியான கொரோனா செய்திகளும் உங்களுடைய மனஉளைச்சல் மற்றும் உளச்சோர்வை அதிகரிப்பதுடன் உங்களுடைய உளநல ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம். எனவே இத்தகைய பாதிப்புகளில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

1. தொடர்ச்சியாக மனஅமைதியை குலைக்கும் ஊடகங்களை (தொலைக்காட்சி அலைவரிசை, வானொலி அலைவரிசை, இணையதளங்கள்) பார்ப்பதையும் கேட்பதையும் வாசிப்பதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

2. சமூக ஊடகங்களில் தொடர்ச்சியாக கொரோனா தொடர்பான பயமுறுத்தும் செய்திகளை வெளியிடுபவர்களையும் குழுக்களையும் உங்களுடைய தொடர்பில் இருந்து நீக்கி விடுங்கள்.

3. ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகளில் பெரும் பகுதி மிகைப்படுத்தப்பட்ட அல்லது பொய்யான தகவல்கள் என்பதை உணர்ந்து கொள்வதுடன் அவ்வாறான செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை தவிர்ப்பதனால் உங்களின் அன்புக்கு உரியவர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாவதற்கு நீங்கள் காரணமாவதை நிறுத்து ங்கள்.

3. ஊரடங்கு சட்ட நேரத்தில் குடும்ப உறுப்பினர்களுடன் அதிக நேரத்தை செலவிடுவதுடன் அவர்களுடன் இனிமையாக நேரத்தை வீட்டில் கழிப்பதற்கு உரிய விளையாட்டுகள் பாடல்கள் பாடுவது கீதங்களை இசைப்பது நூல்களை வாசிப்பது போன்ற ஆரோக்கியமான பொழுதுபோக்கு முறைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.



4. உளநல ஆரோக்கியத்தை பேணுவதற்கும் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கும் சத்தான உணவுகள், ஒழுங்கான உடற்பயிற்சிகள் (வளர்ந்தவர்களுக்கு தினம் தோறும் 30 நிமிடங்களுக்கு குறையாமலும் சிறுவர்களுக்கு தினமும் 1 மணி நேரத்துக்கு குறையாமலும்) மற்றும் போதியளவு நித்திரை (தினம் தோறும் 8 மணி நேரம்) அவசியம்.

5. மார்கழி மாதமளவில் கொரோனா தடுப்பூசி பாவனைக்கு வரும் என்ற எதிர்கால நம்பிக்கையுடன் தேவையற்ற மனப்பாரங்களையும் கவலைகளையும் இறைவனின் பொறுப்பில் விட்டுவிடுவதுடன் மனதை அமைதியாக்க தியானத்திலும் பிரார்த்தனை யிலும் ஈடுபடுங்கள். .

6. அரசாங்கத்தினாலும் சுகாதார துறையினராலும் வெளியிடப்படும் முக்கிய அறிவித்தல்கள் தொடர்பாக அவதானமாக இருப்பதுடன் அவற்றை உங்களுக்கு தெரிவிக்கக் கூடிய நம்பிக்கையான நண்பர்களையும் உறவினர்களையும் தொடர்பில் வைத்து இருங்கள்.

7. அதிகரித்த மனப்பதட்டம், பயம், நித்திரை கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் உங்களுடைய பிரதேசத்துக்குரிய உளநல ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உளவள ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

8. மதுபானம், புகைபிடித்தல் மற்றும் ஏனைய போதை பொருட்கள் மனப் பதட்டத்துக்கும் கவலைகளுக்கும் தீர்வாகாது என்பதுடன் உங்களுடைய உளநலம் மற்றும் உடல் நலத்துக்கு மேலும் ஊறுவிளைவிக்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

9. உங்களுடைய குடும்ப உறுப்பினர், உறவினர் மற்றும் நண்பர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருந்தால் அவர்களுக்கு ஆறுதல் கூறி உரிய உளநல ஆலோசனை கிடைக்க உதவி செய்யுங்கள்.

10. சிறு பிள்ளைகளும் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற உண்மையை அறிந்துகொள்வதோடு பெற்றோர்கள் பிள்ளைகளோடு அதிகரித்த நேரத்தை செலவழிக்கவேண்டும். அதிகரித்த அழுகை, நித்திரை கொள்வது மற்றும் உணவுப் பழக்கங்களில் ஒழுங்கற்ற தன்மை மனத்தை ஒருநிலைப்படுத்த முடியாமை போன்றவை சிறுவர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருப்பதன் அறிகுறியாக இருக்கலாம்.

இந்த ஆவணம் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் நோய்கட்டுப்பாடு மத்திய நிலையத்தின் பரிந்துரைகளுக்கு அமைய தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி தயார் செய்யப்பட்டுள்ளது .

# ஆழியவளையில் ஒதுங்கிய மாத்தளன் மீனவர்கள்!

## விசாரணையின் பின் விடுவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 24

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், முல்லைத்தீவு மாத்தளனிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இருவர் கரைக் குறிப்பைத் தவறவிட்டு யாழ்ப்பாணம் ஆழியவளைக் கடற்கரையில் நேற்று அதிகாலை கரையொதுங்கினர்.

முரல் வலைத் தொழிலுக்காக அவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் வீசியவலையை இழுக்கின்றபோது ஒரு தொகுதி வலை கடலில் தவறியுள்ளது.

"அதனைத் தேடி அலைந்ததால் கரைக் குறிப்பைத் தவறவிட்டோம்" என்று கடற்றொழிலாளர்கள் இருவரும் தெரிவித்தனர்.

ஊரடங்கால் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. இருந்தும் ஒரு படகு கரை சேர்ந்ததைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் சிலரும் கடற்படையினரும் பிரதேச சபை உறுப்பினர் பிரசாந்தனும் கடற்கரைக்குச் சென்றனர்.

மீனவர்கள் இருவரையும் கடற்படையினர் கைது செய்தனர். விசாரணையின்போதே மேற்கண்ட காரணத்தைக் கூறினர். அதனையடுத்துஅந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரும் இராணுவப் புலனாய்வாளர்களும் விவரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர்களுக்கு காலை உணவளித்தபின் கடல்வழியாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

(த-70)

# பாண் வழங்கிய தவிசாளர்

கரவெட்டி, மார்ச் 24

கரவெட்டிப் பிரதேசத்துக்குட்பட்ட மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு அந்தச் சபையின் தவிசாளர் ஐங்கரன் பாண்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார்.

அவ்வாறு 600 இறாத்தல் பாண்கள் நேற்று அவரால் வழங்கப்பட்டது. நெல்லியடி பொலிஸார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பிரதேசசபைஉறுப்பினர்களால் அந்தப் பாண்கள் வறியவர்களுக்கு வழங்கப்பட்டது.

கொரோனா நோய்த் தொற்று அதிகரித்ததால், நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாளாந்தம் கூலிவேலை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது ஜீவனோபாயத்தைப்போக்கிக்கொள்ளும் கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டே குடத்தனை, துன்னாலை, வேம்படி, காட்டுப்புலம் பகுதி மக்களுக்கே காலை உணவாக பாண்களை தவிசாளர் நேற்றையதினம் வழங்கினார்.

(ப-422)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
06 ★ 12 ★ 1935



விண்ணில்
24 ★ 03 ★ 2019

திதி: 24.03.2020

அமரர் சிற்றம்பலம் சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற மாவட்ட காணி உத்தியோகத்தர் / உதவிக் காணி ஆணையாளர் )
(DLO/ALC)

வருடமொன்று உருண்டோடினாலும் எம்
இதயத்தின் கனம் இன்னும் கரையவில்லை
மானிடப் பிறப்பின் மகத்துவப் பொறுப்புகளை!
மண்விளங்கச் செவ்வனவே நிறைவேற்றி
சார்ந்தவர், சாராதவர் பாகுபாடின்றி
வாழ வழிகாட்டிய விடிவெள்ளி உங்கள்
உடல் அழிந்தாலும் அடுத்தவர் நெஞ்சில்
உயிர்த்து நிற்கும் உங்கள் புகழ் இனிய
நினைவுகளும் உங்கள் வார்த்தைகளும் எம் இதயத்தில்
பசுமரத்தாணி போல் நீடித்து நிலைத்து நிற்கும்.
எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்தி பெற வீரகத்தி
விநாயகர் பெருமானின் பாதம் பணிகின்றோம்.

"லட்சுமி பவனம் "
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி

குடும்பத்தினர்
0761343242

# கோழி முட்டை இனி 10 ரூபா

கொழும்பு, மார்ச் 24

**கோழி முட்டை ஒன்றின் விலையை 10 ரூபாவாக விலைக் குறைப்புச் செய்வதற்கு முட்டை உற்பத்தியாளர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. கொரோனா வைரஸ் தாக்கத்தால் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டவர்களுக்கு வழங்கப்படும் உணவுடன், கோழி முட்டையையும் வழங்குவதற்கும் அவர்கள் முன்வந்துள்ளனர்.**

பிரதமர் மஹிந்த ராஜபக்ச வுக்கும், அனைத்து முட்டை உற்பத்தியாளருக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில், பிரதமர் மகிந்தராஜபக்ச முட்டை உற்பத்தியாளர் சங்கங்களிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே அவர்கள் முட்டைகளை மானிய விலையில் வழங்க முன்வந்துள்ளனர்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு முட்டையின் விலையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் சங்கத்தின் தலைவர் ஆர். எம். சரத் ரத்நாயக்கவிடம் குறிப்பிட்டார். இதற்கமைய நேற்று முதல் ஒரு முட்டையின் விலை பத்து ரூபாவுக்கு விற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சதோச மற்றும் ஏனைய விற்பனை நிலையங்கள் ஊடாக குறைந்த விலையில் முட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது 450 லொறிகள் நாடுதழுவிய ரீதியில் முட்டைகளை விநியோகிக்க ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு மாறாக அதிக விலையில் முட்டைகளை விற்பவர்கள் தொடர்பில் 0372293300 என்ற இலத்துக்கு அழைத்து பொது மக்கள் முறைப்பாடு செய்ய முடியும் என அனைத்து முட்டை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கொரோனா நோயாளி அடையாளம்: உடுவிலில் கொரோனா விழிப்புணர்வு

உடுவில், மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று நபர் அடையாளங்காணப்பட்டதை தொடர்ந்து உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றில் முதலாவது நபர் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தாவடி கிழக்குப் பகுதியில் இனம் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பகுதியில் விழிப்புணர்வு நடவடிக்கை நேற்று மாலை 3 மணி தொடக்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி ரி. திரிபுரசுந்தரி தலைமையில் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் யா.நக்கீரன் உட்பட பல சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இவ் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

மேலும் குறித்த நபருடன் கடந்த 15 ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்புபட்டவர்களை கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணிக்கும் வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-39)

## மடு, நானாட்டானில் திடீர் கண்காணிப்பு

மன்னார், மார்ச் 23

நானாட்டான் மற்றும் மடு பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் நேற்று முதல் திடீர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நானாட்டான் பொது சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சுவிஸ் நாட்டைச் சேர்ந்த போதகர் ஆராதனைக் கூட்டம் நடத்தியிருந்தார். அவருக்கும் அவருடன் நெருங்கிப் பழகிய ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருடைய ஆராதனைக் கூட்டத்தில் நானாட்டான் மற்றும் மடு பகுதிகளில் வசிக்கும் மக்களில் யாராவது தனியாகவோ அல்லது குடும்பமாகவோ கலந்து கொண்டிருந்தால் உடனடியாகப் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரியின் கவனத்துக்குக்கொண்டு வருமாறு மக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அந்த ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் என்னும் சந்தேகத்தில் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள னர்.

அவ்வாறே மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேக்கம் கிராமத்தில் 6 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் வீடுகளிலேயே அவர்கள் தனிமைப் படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மடு மற்றும் நானாட்டான் பொது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் உள்ளவர்களில் யாராவது யாழ்ப்பாணம் சென்று குறித்த ஆராதனையில் கலந்து கொண்டிருந்தால், அல்லது கலந்து கொண்டவர்கள் தொடர்பில் விவரம் தெரிந்தால் உடனடியாக நானாட்டான் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் நேற்று திங்கட்கிழமை முதல் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட நபர்கள் இருந்தால் 070 2819493 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (த-56)



## கொரோனாவைத் தடுக்க உக்கும் பொலித்தீன் ஆடை

அம்பாறை, மார்ச் 24

அம்பாறை வைத்தியசாலையில் கொரோனா கட்டுப்பாட்டு பிரிவினரால், வைத்தியசாலை ஊழியர்களுக்கு அவசியமான ஆடைகள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டுள்ளன. உக்கும் பொலித்தீனைப் பயன்படுத்தி இந்த ஆடை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆடையை ஒரு முறை மாத்திரமே பயன்படுத்த முடியும் என்று அம்பாறை வைத்தியசாலையின் நுண்ணுயிர் பிரிவு வைத்தியர் தர்ஷன விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (க)

## கடற்றொழிலை நம்பியுள்ள மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

### நிவாரணம் வழங்கவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுமாயின் அன்றாடம் கடற்றொழிலுக்கு சென்று தமது உணவு தேவைகளை பூர்த்தி செய்யும் மீனவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச தலைவர் வர்



ணகுலசிங்கம் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

"தற்போது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுமானால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன் எமது கிளைச் சங்கங்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தமது வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு கோரிக்கை முன் வைத்துள்ளனர். எனவே அரசு இது தொடர்பில் கவனம் எடுக்கவேண்டும்" என்றார். (ஐ-160)

# ஊரடங்கு தளரும் வேளையில் வங்கிகளை திறக்கப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 24

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள அனைத்து வங்கிக் கிளைகளையும் திறந்து வைக்குமாறு ஜனாதிபதியின் செயலர் வங்கி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதற்காக கிளை முகாமையாளர்கள் உள்ளிட்ட மட்டுப்படுத்தப்பட்ட பணிக்குழாமினரை பணியில் அமர்த்த வேண்டும்.

இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதியின் செயலர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர அவர்கள் வங்கி ஊழியர்கள் சங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ.5)

# கொரோனா தொற்றா?

# 30 மருத்துவமனைகள் 'ரெடி'!

## இராணுவத்தளபதி தகவல்



கொழும்பு.மார்ச். 24
கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கலாம் எனச் சந்தேகிப்பவர்களுக்கு, சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் 30 வைத்தியசாலைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதுவரையில் இனங்காணப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தனிமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளுடன் தொடர்புள்ளவர்கள் உடனடியாக தங்களைப் பதிவு செய்யவும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க)

# கொரோனா வைரஸ்; உயர்மட்ட ஒன்றுகூடல்

மட்டக்களப்பு.மார்ச் 23
கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கும் நோக்கில் மட்டக்களப்பு ஓட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று பிரதேசத்துக்கான உயர்மட்ட ஒன்றுகூடல் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கும் நோக்கில் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை அனைத்து பிரதேச மக்களும் சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். அதனை மீறுவோருக்கு எதிராக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்போருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்தோடு கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கும் நோக்கில் பிரதேச மட்ட பள்ளிவாசல்கள், வர்த்தக சங்கத்தினர், பிரதேச மட்ட அமைப்புக்கள் மக்களின் நன்மை கருதி மக்களுக்கு விழிப்புணர்வை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் திருமதி.நிஹாரா மௌஜூத், உதவிப் பிரதேச செயலாளர் ஏ.சி.அப்கர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரி.எம்.நஜீப்கான், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி திருமதி.எஸ்.எஸ்.எம்.வசீம் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-150)





# உலர் உணவு பொதிகள் வழங்கல்

மன்னார்.மார்ச் 24
ஊரடங்கால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ மற்றும் கூலித் தொழில் செய்பவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கே பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரனின் முயற்சியால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-56)

# மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்க்கவும்

## வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மக்களுக்கு அறிவுறுத்து

வவுனியா, மார்ச் 24
நெருக்கடியான சூழல் நிலவுவதால் பொதுமக்கள் அவசிய தேவையின்றி மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்தார்.

"நாட்பட்ட நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோர் அவசியத் தேவையை தவிர மருத்துவமனைக்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும்.

குறிப்பாக மாதாந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளும் நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பாக அந்தந்த பிரதேச மருத்துவர்களுக்கோ அல்லது மாவட்ட மருத்துவமனைக்கோ தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

ஏனெனில், மாதாந்த மருத்துவப் பரிசோதனைகளை வழமையாக நடத்துவதுபோல நடத்த முடியாமல் உள்ளது. அத்துடன் அவர்கள் ஏற்கனவே நோயாளர்களாக இருப்பதால் மருத்துவமனைக்கு வரும்போது அவர்களைப் பாதுகாப்பது கடினமாக இருக்கும்.

எனவே அவர்களின் உறவினர்களிடம் சிகிச்சை தொடர்பான பதிவுகளை வழங்கினால் மருந்துகளை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மாதாந்த சிகிச்சை பெறும் நோயாளர்கள் மருந்துகளை மாத்திரம் பெற்றுக்கொள்ள மருத்துவமனைக்கு வருகைதந்தால் உள்ளே வாராமல் வெளியில் நின்று மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் வைரஸ்தாக்கத்தைக் கருத்திற்கொண்டு மருத்துவமனை வளாகத்தைத் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-110)



# எச்சரிக்கை!

மன்னார், மார்ச்.24
கொரோனா தொற்று காரணமாக ஊடரங்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மன்னார் நகரில் பொது வெளியில் முகக் கவசம் அணியாமல் சென்ற சிலரை பொலிஸார் நேற்று எச்சரித்து அனுப்பினர். (ஐ-213)

# உணவுப் பொருள் தேவையா? கிராம அலுவலரிடம் பதியவும்

## மாவை சேனாதிராசா கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 24
வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினை உள்ளவர்கள் தமது கிராம அலுவலருக்கு அறிவிக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்கு நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் மற்றும் வெளியிடங்களிலிருந்து வந்து பணியாற்றுவோர் தொடர்பில் கிராம அலுவலர்கள் ஊடாக விவரங்களைச் சேகரித்து உணவுப் பொருள் பொதிகள் வழங்கப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து நாளாந்த வேதனத்தில் பணியாற்றுபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதமர் அலுவலகம், வறுமை ஒழிப்புச் செயலணி, வடமாகாண ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடன் பேச்சு நடத்தினேன்.

இவ்வாறான குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் பொதிகளை வழங்குவதற்கு மாவட்டச் செயலாளர்களுக்கு நிதி விடுவிக்கப்படவுள்ளது என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் உண்மையாகவே பிரச்சினை உள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு அவற்றை விநியோகிப்பதற்கு வசதியாக கிராம சேவையாளர்கள் ஊடாக விவரம் சேகரிக்கப்படவுள்ளது. அதுதொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டு அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய பொதி விநியோகிக்கப்படவுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

எனவே வசதிகுறைந்த மக்கள் தங்கள் விவரங்களை கிராம அலுவலர்களிடம் வழங்கி அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கொண்ட பொதியைப் பெறுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று மாவை சோ.சேனாதிராசா கேட்டுக் கொண்டுள்ளார். (த-111)



# வீடுகளுக்கு சிலிண்டர் வழங்குவதற்கு ஏற்பாடு!

கொழும்பு, மார்ச் 24
நாடு தழுவிய ரீதியில் லிட்ரோ காஸ் நிறுவன வழங்கல் மத்திய நிலையங்கள் ஊடாக வீடுகளுக்கு எரிவாயு சிலிண்டரை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து நாடுதழுவிய ரீதியில் உள்ள 9 ஆயிரம் லிட்ரோ காஸ் நிறுவன வழங்கல் மத்திய நிலையங்கள் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணத்தில் உள்ள அனைத்து வழங்கல் மத்திய நிலையத்தின் ஊடாக இந்த சேவை முதற் கட்டமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளங்கள் ஊடாக இது தொடர்பான மேலதிக தவகல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை, எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தியில் உண்மையில்லை. நுகர்வோருக்கு தேவையான எரிவாயுக்களை வழங்குவதற்கு மத்திய நிலையங்கள் ஊடாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு இருக்கும் பிரதேசங்கள் லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் நுகர்வோர் பிரிவின் 0112 2505808 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளலாம் என்று அந்த நிறுவனம் தெரிவித்தது. (ஏ)

# அடங்க மறுத்த 1,754 பேர் கைது

### 447 வாகனங்களும் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 24
ஊரடங்கு உத்தரவு விதிகளை மீறியமைக்காக மொத்தம் ஆயிரத்து 754 பேர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6 மணி வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட 447 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விளையாட்டு மைதானங்களில், வாகனங்களில் பயணம் செய்தல், வர்த்தகத்தில் ஈடுபடுவது மற்றும் பொது இடங்களில் மது அருந்திய குற்றச்சாட்டுக்களில் சிலர் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த பொலிஸார் ஊரடங்கு உத்தரவின் போது அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றவும் வீடுகளுக்குள் இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஏ)

# அவசியமின்றி வராதீர்!

### வாடிக்கையாளர்களுக்கு இலங்கை வங்கி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச் 24
அத்தியாவசிய பண மீள்பெறல்களைத் தவிர, வேறு எந்த காரணங்களுக்காகவும் வங்கிக் கிளைகளுக்குள் பிரவேசிக்க வேண்டாம் என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வங்கிகள் பிரவேசிக்கும் போது, முகப் பாதுகாப்பு கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.

வங்கிக்கோ அல்லது தன்னியக்க அலகுகளுக்கோ செல்லும் முன் அல்லது சென்ற பின் சவக்காரம் அல்லது ஏதேனும் திரவியங்களால் கைகளைச் சுத்தப்படுத்துங்கள். வங்கியில் வரிசையில் நிற்கும்போது, சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளக்கூடிய இடைவெளி விட்டிருத்தல்.

வங்கியில் காணப்படும் பேனைகளைப் பயன்படுத்துவதை தவிருங்கள், எப்பொழுதும் உங்கள் சொந்த பாவனைக்கென்றே பேனைகளை வைத்திருங்கள்.

பணத்தை வைப்பிலிடுவதற்கு இயன்றளவு காசு வைப்புச் செய்யும் ( CDM) இயந்திரங்களைப் பயன்படுத்துங்கள்.

உங்களுக்குத் தேவையான பற்றுச்சீட்டுக்களை மாத்திரம் உபயோகியுங்கள், பற்றுச்சீட்டுக்களை வெளியே எடுத்து செல்ல வேண்டாம். பணத்தை எண்ணும் போது எச்சில் வைத்து கைகளை ஈரப்படுத்துவதனை முற்றுமுழுதாகத் தவிர்த்திடுங்கள்- என்றுள்ளது. (க-422)

# கால்நடை மருத்துவ சேவைகளை தொலைபேசி வாயிலாக பெறலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கால்நடை வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் மிகவும் அவசியமான தேவைப்பாடுடைய கால்நடைகளுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே அலுவலகங்களுக்கு பொதுமக்கள் வருவதை தவிர்த்து கால்நடைகளுக்கான சுகாதார மருத்துவ சேவைகளை தொலைபேசி வாயிலாக பெற்று பயனடையுமாறு கால் நடை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர் தெரித்துள்ளனர்.



நாட்டில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வீட்டிலிருந்தவாறே பணியாற்றுவதற்கு விடுமுறை வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த சேவையை தொலைபேசி வாயிலான மேற்கொள்ள முன்வந்துள்ளோம்.



அத்துடன் கடுமையாக பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான சேவைகளை அலுவலக நேரத்தில் வைத்தியர்கள் வீடுகளுக்கு நேரடியாக வந்து வழங்குவர் என்றும் கால் நடை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர் தெரித்துள்ளனர். (ஜ-39)

# இன்றைய ராசிபலன்

**மேடம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன். சிறப்பான நாள்.

**இடபம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** கணவன் – மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்துக்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**சிம்மம்:** உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோ தர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சுவார்த்தை வெற்றியடையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**கன்னி:** அரசாங்க விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமை உணர்வுடன் செயல்படுவார்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயா ருக்கு கை, கால், வலி சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**தனுசு:** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மகரம்:** குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

**கும்பம்:** எந்த காரியத்தையும் நினைத்த வேகத்தில் முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் மதிப்பு கூடும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்:** மறைமுக விமர்சனங்களும் தாழ்வு மனப்பான்மையும் வந்து செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும்.

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பிரமணியம்
## (மணியம்)



காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 23/03/2020 இன்று திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற விசுவர் கந்தையா இலட்சுமிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரன் (குமார், லண்டன்), ரட்ணேஸ்வரன் (ரமேஷ் லண்டன்), மனோரஞ்சிதம் (கோமளம்)ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி,காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்பு சகோதரரும் அருட்சோதி (லண்டன்), ஸ்ரீபிரியா (லண்டன்), சுந்தரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியம், புனிதவதி, உமாதேவி, வீரசிங்கம் மற்றும் திருநாவுக்கரசு, புகனேஸ்வரி, காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் திவ்வியன், யாதவன், துர்க்கா, டினோஷான், சிந்துஜன், ஸ்ரீலேகா, வேயோன், பரணிதரன், சஞ்சீவன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு விளானை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
*தொ.பே: 094771147054*

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி செல்லத்துரை



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய இராச்சியம், மிடில்செக்ஸில் (United Kingdom, Middl esex) வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி செல்லத்துரை வியாழக்கிழமை 19 மார்ச் 2020, இரவு 22.00 மணியளவில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி தம்பதிகளின் புதல்வியும், திரு. அப்பாக்குட்டி செல்லத்துரையின் அன்பு மனைவியும், மஞ்சுளா, டாக்டர். நிர்மலா (UK) , பாஸ்கர்(UK) , விஜிதா (Canada) ஆகியோரின் அன்பு தாயும், திரு. தங்கராசா (சந்திரன்-Germany) திரு. குலநாயகத்தின் சகோதரியும், தனபாலசிங்கம், சிறீபாலன், தீஹாயினி ஆகியோரின் மாமியும், தக்சணன், காமலின் ருக்சணா, கஹன், திரிசாலா, மானஸ் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
WhatsApp - +44 7958 643860

# மரண அறிவித்தல்

## பிறேமா குணபாலசிங்கம் (சோபா)




கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் பிறேமா 21.03.2020 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், குணபாலசிங்கத்தின்(கடவுள்)அன்புமனைவியும், நிசாந்தன் (சுவிஸ்), டினேஜா(லண்டன்),நிசாந்தினி, ஜெனனி (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்), கஸ்தூரி (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) ஆகியோரின்அன்புத்தாயாரும்,தர்மவதி(சுவிஸ்),பாமா(சுவிஸ்),காலஞ்சென்றவர்களானசரவணபவன்,உமாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சயிந்தன் (லண்டன்), சபிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சயித், சாத்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தனபாலசிங்கம் (சுவிஸ்), நிசாந்தன் (சுவிஸ்), காலஞ் சென்றவர்களான புஸ்பமலர், புஸ்பராணி மற்றும் சரோஜினி தேவி (பணிப்பாளர், சமுர்த்தி வவுனியா), அம்பாலிகை (கோண்டாவில்), அம்பிகை (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (23.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 11 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ந.குணபாலசிங்கம் (கடவுள்)
நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## புஸ்பம் தர்மகுலராசா
## (பெரியாம்பி)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், குருசுமதவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பம் தர்மகுலராசா (பெரியாம்பி) 22.03.2020 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் சிவஞானம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கிருஸ்ணாம்பாள் தம்பதிகளின் மூத்த மருமகனும், அருந்தவத்தின் (தவம்) பாசமிகு கணவரும், சுதர்சினி (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்திய சாலை, தெல்லிப்பளை), ராஜரமணன் (மாணவன், விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக் கழகம்), பாலகீரன் (Surveyor) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினோதரனின் மாமனாரும், அபிநயன், சுஜானா ஆகியோரின் பாசமிகு பேரனும், தர்மகுலசிங்கம், தர்மகுலராணி (பிரான்ஸ்), தர்மகுலதேவி, காந்தசொரூபி, வரதராசா, காலஞ் சென்ற இளங்கீரன் மற்றும் கலீதரன் (லண்டன்), கீதாஞ்சலி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான பரமலிங்கம், பாக்கியம் மற்றும் இராசலிங்கம் (கொழும்பு), நாகம்மாவின் பெறாமகனும், காலஞ் சென்றவர்களான சண்முகம், தர்மலிங்கம், நவரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் மருமகனும், ஸ்ரீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயராசா, உத்தரதாசன், சாந்தினி, சிவசேகரன் (லண்டன்), அன்பழகன் (சுவிஸ்), அருட்சோதி, அகிலன், அருள்ராசா, அருள்மொழி, ஐங்கரன், அருள்குமரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.03.2020 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**0775572984**

*116, மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

# கொரோனாவை வெற்றிகொள்ள பொறுப்போடு செயற்படுவோம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அழைப்பு



கொழும்பு, மார்ச் 24

எமது நடத்தையின் ஊடாக மாத்திரமே கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் ஊடாக இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகம் முழுவதும் பரவி, தற்போது இலங்கையிலும் பரவ ஆரம்பித்திருக்கும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதன்படி தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அரசின் செயற்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவையாளகளின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

அதேபோன்று முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்னமும் இந்தத் தொற்றுநோயின் பாரதூரத்தன்மையைப் புரிந்துகொள்ளாமல் சில தரப்பினர் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

எமது நடத்தையின் ஊடாக மாத்திரமே வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் ஊடாக இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியும் என்றுள்ளது.

(ஒ.5.22)

# விவசாயிகளுக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஜனாதிபதியின் கருத்தை நம்பி, சந்தைகளுக்கு இன்று மரக்கறிகளைக் கொண்டுசென்ற விவசாயிகள், சந்தைக்காரருக்கோ பொதுமக்களுக்கோ விற்கமுடியாத நிலையில், ஏமாற்றத்துடன் மீள எடுத்துச்சென்றனர்.

மருதனார்மடம் சந்தைக்கு வெளிப்புறத்தில் மரக்கறி வியாபாரிகள் கூடிதமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முற்பட்டபோதும் பொலிஸாரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் அதனைத் தடுத்து நிறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு நேற்றுத் தளர்த்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததால் யாழ்ப்பாண விவசாயிகள் நேற்று முன் தினமே மரக்கறிகளை அறுவடைசெய்து சந்தைக்குக் கொண்டுசெல்லத் தயாராகவிருந்தனர்.

பின்னர் ஊரடங்கு நேற்று நீக்கப்படாது என்று திடீரென அறிவிக்கப்பட்டது. எனினும், விவசாய உற்பத்திகளை விவசாயிகள் நேற்று மருதனார்மடம் சந்தைக்குக் கொண்டுசென்றனர்.

இதன்போதே யாழ்ப்பாண விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் காலப்பகுதியில் எந்த மாவட்டத்திலும் விவசாயநடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படும் என்றும் விவசாயிகள் மரக்கறி வகைகளைக்கொண்டுசெல்வதற்கு இடமளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்ததமை குறிப்பிடத்தக்கது. (கு)

## வைரஸை அழிக்க மருந்து விசுறுதல்

வடமராட்சி, மார்ச் 24

பருத்தித்துறை பிரதேச சபையினரால் மந்திகை பொதுச்சந்தை, பஸ் தரிப்பிடங்கள், பொது நூல் நிலையம், புலோலி உப அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் உட்பட பொது இடங்களில் கொரோனா வைரஸுக்கு எதிரான, தொற்றுநீக்கி மருந்து தெளிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் மருந்து விசிறல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஏனைய சந்தைகள், பொது இடங்களுக்குத் தொற்று நீக்கி மருந்து தொடர்ந்து தெளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க173)

# அரச கொடுப்பனவுகள் நேரடியாக வீடுகளுக்கு

## முல்லை. மாவட்ட செயலகம் ஏற்பாடு

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோர் கொடுப்பனவு, மாதாந்த பொதுசனக் கொடுப்பனவுகள் அனைத்தும் உடன் பிரதேசசெயலகம் ஊடாக நேரடியாக வீடுகளுக்கு வழங்க மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாக தபால் திணைக்களமும் மூடப்பட்டுள்ளது. அதனால் உதவிக் கொடுப்பனவு பெறுபவர்களின் நன்மை கருதி, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதில் மாற்றுவலுவுள்ளோருக்கான கொடுப்பனவுகள் மட்டும் மூவாயிரம் பேருக்கு வழங்கப்படுகின்றது.

இதேநேரம் இன்றுகாலை 6 மணி முதல் ஊரடங்கு தளர்த்தப்படுவதால் வர்த்தக நிலையங்கள் மற்றும் சதொசா கிளைகளை 7 மணிக்கே திறக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. முக்கிய பொருள்களை பங்கீட்டு அட்டைகளுக்கு மட்டுமே விநியோகம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கிளைகளில் மட்டுமன்றி சங்கத்தில் உள்ள பாரவூர்திகள் மற்றும் இரு சக்கர உழவு இயந்திரங்களிலும் பொருள்களை ஏற்றிச் சென்று கிராமங்களில் வைத்து விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 106 பேர் தனிமைப்படுத்தப்பட்டு தொடர் கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

(க105)

# பவுசர்கள் மூலம் மக்களுக்கு குடிநீர்

வடமராட்சி, மார்ச் 24

பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கான குடி தண்ணீர், பவுசர்கள் மூலம் நேற்று விநியோகிக்கப்பட்டது.

சுப்பர்மடம், இன்பருட்டி, பொலிகண்டி, அல்வாய் ஆகிய பகுதிகளுக்கு ஒரு பவுசர் மூலமும், கெருடாவில் பகுதிக்கு மற்றொரு பவுசர் மூலமும் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

கொரோனா வைரஸின் ஆபத்தையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திடீரென அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால், மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் தடைப்பட்டிருந்தது.

ஊரடங்குச் சட்டம் நேற்றும் அமுலில் இருந்த போதிலும், மக்களுக்கான குடிதண்ணீர்தேவை கருதி, பருத்தித்துறை பிரதேச சபையால் இரண்டு பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க ப்பட்டது.

(க173)

# பால் கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று காலை முதல் பால் கொள்வனவு செய்யப்படும் என்று யாழ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

பாற் பண்ணையாளர்கள் ஊரடங்கு சட்டம் காரணமாக பாலை சந்தைப்படுத்த முடியாத நிலைமை காண ப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு பாற் பண்ணை யாளர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# ஊரடங்குக் காலத்தில் சிறப்பு வேலைத் திட்டம்

## அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப் பகுதியிலும் மக்கள் தமது அத்தியாவசிய கடமைகளை முன்னெடுக்க கூடிய வகையில் அரசு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியு ள்ளது.

அதற்கமைய அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தமது அத்தியாவசிய தேவைகள் குறித்து அறிவித்ததன் பின்னர் அத்தியாவசிய பொருள்களை கொண்டுச் செல்ல முடியும்.

அதேபோல் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கும் நபர்கள் தத்தமது பணியிடங்களுக்கு செல்வதற்கான இயலுமை உள்ளது.

மேலும் நாட்டின் எந்தவொரு பகுதியில் இருந்தும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை கொண்டுவரவும், கொண்டு செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஒ.5)

பட்டம் வழங்கலும்
75ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

அருள் மிகு ஸ்ரீ
மாணிக்கப்பிள்ளையார்
ஆலயத்தில் கடந்த பதினைந்து
வருடங்களாக சைவ
இன்னிசைச் சொற்பொழிவு
ஆற்றிவரும்

கல்ாபூசணம்
அருள் மொழியரசு
சிவத்திரு வ.குமாரசாமி ஐயர்

அவர்களது சைவத்துக்கும்,
தமிழுக்கும் ஆற்றிவரும்
சேவையை கௌரவிக்கும்
முகமாக
சைவத் தமிழ் நாவலர்
என்னும் பட்டத்தைச் சூட்டி
(வழங்கி) கொள்வதோடு, அவரது
75ஆவது பிறந்த தின
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ
மாணிக்கப்பிள்ளையார்
ஆலய பரிபாலன சபை,
அடியவர்கள்.



## 6 மணிக்கே...

பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதில் இடையூறுகளை எதிர்கொள்ளக்கூடும். இதனால் வர்த்தகர்களும் இடையூறுகளை எதிர்கொள்ளவேண்டிவரும்.

எனவே மக்களின் நெருக்கடியைக் குறைக்கும் வகையில் இன்று காலை 6 மணிக்கே வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு வணிகர் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.(கு20)

## பொருள்கள்...

கரன் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றும் நேற்றுமுன்தினமும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்த லொறிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் பொருள்களை விநியோகிக்கின்றன. எனவே, பொருள்கள் தாராளமாக உள்ளன. பற்றாக்குறையே ஏற்படாது. எனவே பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் முண்டியடிக்க வேண்டிய அவசியமே இல்லை.

இதுதவிர, யாழ்.வணிகர் கழகத்தின் முயற்சியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலரின் சிபார்சில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் விசேட அனுமதி பெற்று 15க்கும் மேற்பட்ட லொறிகள் மேலும் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவருவதற்காக நேற்றிரவு கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளன என்றும் ஜெயசேகரன் மேலும் தெரிவித்தார்.

## மதபோதகருடன்...

லிருந்து வந்த மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவருடன் ஓர் அறையில் தனித்துச் சந்தித்த தாவடி வாசிக்கும் கொரோனா இருப்பது உறுதியானது. இதனையடுத்து மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 18பேர் அடையாளப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 12பேர் நேற்றுக் காலையும் எஞ்சிய 6 பேர் நேற்று மாலையும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

## நாடாளுமன்றம்...

இன்று காலை 10 மணியளவில் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கொரோனா வைரஸ் கட்டுப்பாடு மற்றும் நாட்டின் அனர்த்த நிலைமையால் அரசுக்குப் பெருமளவு நிதி தேவைப்படுவதால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டிய அவசியம் குறித்து இதன்போது கட்சித் தலைவர்கள் வலியுறுத்தவுள்ளனர். வடக்கு, கிழக்கு நிலைமைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைக்கவுள்ளது. (ஒ.5,22)

## எரிபொருள்..

பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலனறுவையிலிருந்து அநுராதபுரம், மட்டக்களப்பு, பேராதெனிய மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட இடங்களுக்கு இந்த எரிபொருள் ரயில்கள் சென்றன. நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. மக்கள் அநாவசியமாக பீதியடைய வேண்டிய தேவையில்லை. அத்துடன், அவசர மற்றும் அத்தியாவசிய தேவைக்காக எரிபொருளை பெற்றுக் கொள்வதில் மக்களுக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படாது. என்றார்.

இதேவேளை, வடக்கில் உள்ள சகல எரிபொருள் நிலையங்களுக்கும் நேற்றைய தினம் தேவையான எரிபொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் முண்டியடிக்காமல், அவசியமானோர் மட்டும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ.5, 17)

## கொரோனா...

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் இருவர் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார். 222 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலும் உள்ள 45 தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களில் 3 ஆயிரத்து 506 பேர் தங்கவைக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (ஒ.5,22)

## ஆனையிறவுக்கு..

னைச் சாவடியைத் தாண்டமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்குச் செல்வதாயின் உரிய அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் கிளிநொச்சி, ஆனையிறவு பகுதியில் ஏ9 வீதியில் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு நேற்றுத் தொடக்கம் கண்காணிப்பு தீவிரப்படு த்தப்பட்டுள்ளது. அதில் பொலிஸாரும் படை யினரும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அனுமதிபெறாது நேற்றுப் பயணித்த அனைவரும் ஆனையிறவு சோதனை நிலையத்தோடு மீளவும் யாழ்ப்பாணத்துக்கே திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஊரடங்கு மற்றும் பிற மாவட்டங்களுக்குப் பயணிக்கத் தடை காரணமாக ஏ9 வீதியில் கிளிநொச்சி உட்பட சில இடங்கள் வெளிச்சோடிக்காணப்படுகின்றன. (கு)

## ஒரு நபரால்...

மாக பரவக் கூடியளவு ஆபத்தானது. வெளியே நடமாடி விட்டுத் திரும்புபவர்கள் நீராடிய பின்னர் வீட்டுக்குள் நுழைவதே பாதுகாப்பானதாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அநுருத்த பாதனிய தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தற்போதைய பாரதூரத் தன்மையை உணர்ந்து பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்போது பொது மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்.

பொதுமக்கள் தமக்குத் தேவையான அத்தியாசியப் பொருள்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்காக தற்காலிகமாக ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்புக்காக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை அனைவரும் உணர்ந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் தீவிரமடைந்தால் எமது சொத்துக்கள் மாத்திரமின்றி விலை மதிப்பற்ற உயிரையும் பாதுகாக்க முடியாத சூழல் ஏற்படும்.

வைரஸ் பரவல் தீவிரமடைந்தால் பொதுமக்களின் உயிரைப் பாதுகாப்பதில் காணப்படும் சிக்கல் குறித்து எம்மைப் போன்றே நீங்கள் ஒவ்வொருவரும் அறிவீர்கள். ஒரு மாதத்துக்குள் ஒரு நபரிடமிருந்து சுமார் 403 பேருக்கு மிகத் துரிதமாக இந்த வைரஸ் பரவும் என்பது அதில் காணப்படும் மிகப் பாரதூரமான விடயமாகும்.

தற்காலிகமாக பொலிஸ் ஊரடங்கு சட்டம் நீக்கப்படும் போது அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்ய செல்பவர்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஒரு குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் வெளியில் செல்வது சிறந்ததாகும். அவ்வாறு வெளியில் செல்பவர்கள் முகக்கவசம் அணிந்திருப்பது அத்தியாவசியமானது என்பதோடு விற்பனை நிலையங்களில் பிரிதொருவரிலிருந்து சுமார் 1 மீற்றர் தூர இடைவெளியில் நிற்க வேண்டும்.

பொருள்களை கொள்வனவு செய்து வீடு திரும்பிய பின்னர் கொள்வனவு செய்த பொருள்களை சிறிது நேரம் வெயிலில் வைத்து வீட்டுக்குள் எடுத்துச் செல்ல வேண்டும். வெளியில் சென்று திரும்புவர்கள் நீராடிய பின்னர் வீட்டுக்குள் நுழைவது பாதுகாப்பானதாகும். ஆடைகளை சலவை செய்து வெயிலில் உலர வைத்து எடுப்பதும் அவசியமாகும். என்றார்.(எ)

## வடக்கில்..

வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மீண்டும் ஊரடங்கு சட்டம் பிறப்பி க்கப்படும்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கிடையேயும் பயணங்கள் மேற்கொள்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு சுற்றுப் பயணிகளை இடத்துக்கு இடம் அழைத்துச் செல்வதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் எந்த மாவட்டத்திலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மற்றும் மரக்கறி வகைகளை கொண்டு செல்வதற்கும் இடமளிக்கப்படும்.

விவசாய மற்றும் வர்த்தக துறைக்கு பொறுப்பான அமைச்சர் இப்பணிகளை முறையாக நிர்வகிக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. (ஒ.5)

## களப்பணியாளர்கள்...

கடற்படையினர் பாதுகாப்புக் கவசங்களுடன் பணியில் ஈடுபட்டபோதும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கையுறை மற்றும் முகக் கவசம் மாத்திரமே அணிந்திருந்தனர். தமக்குரிய பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்.

யாழ்ப்பாணத்தில் வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்கள், கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் பழகியவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களைத் தினசரி கண்காணிக்கும் நடவடிக்கைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தாவடியில் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து அவரது வீடு, அருகிலிருந்த வீடுகள், ஆலயம், தனியார் மருத்துவ கிளினிக், அவரது நண்பரின் வீடு என்று பல தரப்பட்ட இடங்களில் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கடற்படையினர் இந்தப் பணியை முன்னெடுத்தனர். அவர்கள் முழுமையான பாதுகாப்புக் கவசங்கள் அணிந்தவாறு இந்தப் பணியில் ஈடுபட்டனர். ஆனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சாதாரண முகக் கவசங்கள் மற்றும் கையுறைகளை அணிந்தவாறு பணியில் ஈடுபட்டனர்.

'எமக்கான பாதுகாப்புக் கவசங்கள் பெற்றுத் தரப்படவில்லை. அதைக் கேட்டால் வேண்டுமென்றால் மழை அங்கியை வாங்கித் தருவதாகச் சொல்கின்றார். கொரோனா தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு 20 மணி நேரம் கடந்தும், அந்தப் பகுதியை மருத்துவ அதிகாரி எவரும் வந்து பார்வையிடவில்லை. எமது உயிரைப் பணயம் வைத்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் நாம் ஈடுபடுகின்றோம்' என்று அவர்கள் குற்றம் சுமத்தினர். (ஒ.ப)

## 6 மாதக்...

கொரோனா தொற்றுச் சந்தேகம் காரணமாக மருத்துவமனையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருந்த இருவர், கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு நேற்று வெளியேறியுள்ளனர். இவர்களில் ஒருவர் காரைநகரைச் சேர்ந்தவர். மற்றையவர், இந்தியாவிலிருந்து வந்த யாத்திரிகர்கள் தனிமைப்படுத்தப்பட்ட வவுனியா தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து கொரோனா தொற்றுச் சந்தேகம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்.

இதேவேளை சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் அரியாலையில் நடத்திய ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்றவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படும் 4 பேர் கொரோனா நோய்த் தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்பட்டதாக சந்தேகத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழி, அரியாலை, முல்லைத்தீவு அளம்பிலைச் சேர்ந்த மூன்று ஆண்களும், மன்னாரிலிருந்து 6 மாதக் குழந்தையுமே நேற்றைய தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

# கொரோனாவை அமெரிக்காவே உருவாக்கியது

ஈரான் குற்றச்சாட்டு

தெஹ்ரோன், மார்ச் 24
உலகமெங்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸை அமெரிக்காவே உருவாக்கியது என்று ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த உதவுவதாக அமெரிக்கா பல முறை முன்வந்தது. அவர்கள்தான் அந்த வைரஸை உருவாக்கியதாக ஒரு குற்றசாட்டு உள்ளது. அது உண்மை. ஆனால் நீங்கள் எங்களுக்கு உதவ முன்வருவது விந்தையாக இருக்கிறது. உதவி செய்வதாக கூறி, ஈரானில் வைரஸ் நிரந்தரமாக இருக்க உதவும் ஒரு மருந்தை எங்களுக்கு வழங்கினால் என்ன செய்வது? என கேள்வி எழுப்பினார். மேலும், அமெரிக்க தலைவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரிந்தது போல நடிப்பவர்கள் - என்றார். (ம)





# கொரோனா பலி 15,000

பீஜிங், மார்ச் 24
கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உலக அளவில் 15 ஆயிரத்தை எட்டியது.

சீனாவின் வுகான் மாகாணத்தில் ஆரம்பித்த கொரோனா துரித கதியில் சீனாவின் ஏனைய மாகாணங்களுக்கும் பரவியது. அதன் பின்னர் சீனாவில் இருந்து உலகளாவிய ரீதியில் வேரூன்றியது. சீனாவை விட இத்தாலி கொரோனாவால் அதிக பாதிப்பை எதிர்கொண்டது. நேற்று மாலை வரையான நிலவரத்தின்படி சீனாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 3,270 ஆகவும், இத்தாலியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5,514 ஆகவும் இருந்தது. உலக அளவில் உயிரிழப்பு எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தாண்டியது.

இத்தாலி, சீனாவுக்கு அடுத்தபடியாக ஸ்பெய்ன், ஈரான், பிரான்ஸ் நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஸ்பெய்னில் 1,813 பேரும், ஈரானில் 1,685 பேரும், பிரான்ஸில் 674 பேரும் கொரோனாவால் இதுவரை உயிரிழந்துள்ளனர். (ம)

# கனிகாவின் நண்பருக்கு இந்தியாவில் வலைவீச்சு

புதுடெல்லி, மார்ச் 24
பொலிவுட் பாடகி கனிகா கபூருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவரது நெருங்கிய நண்பர் இந்தியப் பொலிஸார் தேடப்பட்டு வருகின்றார். கனிகா கபூர் வெளிநாடு சென்று திரும்பியதும் அவருடன் தொடர்பில் இருந்த 260 பேரையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். ஆனால் அவர்களில் ஓஜாஸ் தேசாய் என்ற ஒருவரை மட்டும் பொலிஸாரால் தொடர்பு கொள்ள இயலவில்லை. அவருடைய முகவரியும் சரியாக தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கனிகா கபூர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் தற்போது அவரிடமும் விசாரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கனிகாவின் நெருங்கிய நண்பராக அறியப்படும் ஓஜாஸ் தேசாய் 70 வயதை கடந்த தனது பெற்றோருடன் வசித்து வருவதாகவும், இதனால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்றும் பொலிஸார் கவலை தெரிவித்தனர். (ம)



# சவுதியில் ஊரடங்கு!

ரியாத், மார்ச் 24
சவுதியில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதை அடுத்து ஊரடங்கு உத்தரவை அந்த நாட்டு அரசு பிறப்பித்துள்ளது.

சவுதி அரேபியாவில் கோவிட் 19 (கொரோனா வைரஸ்) காய்ச்சலுக்கு இதுவரை 511 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து கோவிட் 19 காய்ச்சல் பரவுவதை தடுக்கும் வகையில் சவூதி அரசு தீவிர நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது. அந்த வகையில் நாடு முழுவதும் 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவை சவுதி விதித்துள்ளது. இந்த உத்தரவு நேற்று மாலை முதல் நடைமுறைக்கு வந்தது. (ம)



# 75 மாவட்டங்கள் முடக்கப்பட்டன!

புதுடெல்லி, மார்ச் 24
கொரோனா வைரஸ் காரணமாக இந்தியாவில் சுமார் 75 மாவட்டங்கள் முடக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவுதைதடுக்கும்பொருட்டு பல நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு நேற்று முன்னெடுத்தது. இதன் ஒருபகுதியாக கொரோனா தொற்று உள்ளோர் அதிகம் உள்ள 75 மாவட்டங்களை மற்ற பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம)

# அரண்மனையில் கொரோனா

## ராணி எலிசபெத் அதிர்ச்சி!

லண்டன், மார்ச் 24
லண்டன் அரண்மனை ஊழியருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அரண்மனையை விட்டு ராணி எலிசபெத் வெளியேறினார்.

உலகையே ஆட்டிப் படைத்துவரும் கொரோனா, லண்டனையும் கதிகலங்க வைத்து வருகிறது. அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 233ஆக அதிகரித்துள்ளது.



இதற்கிடையே பக்கிங்ஹாம் அரண்மனையில் பணியாற்றி வந்த ஊழியர் ஒருவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து 93 வயதான ராணி எலிசபெத், பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வெளியேறி வின்ட்சர் கோட்டைக்குச் சென்று தங்கியுள்ளார். (ம)

# தனிமையில் மெர்க்கல்

பெர்லின், மார்ச் 24
கொரோனா அச்சம் காரணமாக தன்னைத்தானே தனிமைப்படுத்தியுள்ளார் ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல்.

கொரோனா வைரசால் ஜேர்மனியில் மொத்தம் 25 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் கிட்டத்தட்ட 2000 பேருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 55 பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் அறிகுறி உள்ளவர்கள், அவர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து உணவகங்களும் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்கல், கொரோனா அச்சம் காரணமாக தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்வதாக அறிவித்துள்ளார். (ம)



# தனிமையில் மேரி கொம்!

புதுடெல்லி, மார்ச் 24
பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரி கொம், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தன்னைத்தானே தனிமைப்படுத்துவதாக அறிவித்தார்.
டோக்கியோ ஒலிம்பிக் தொடருக்கான தகுதிச் சுற்று ஜோர்டானில் அண்மையில் நடைபெற்றது. அதில் மேரிகொம் கலந்துகொண்டார். இந்தத் தொடருக்கு முன்னதாக மேரி கொம் இத்தாலியில் நீண்ட நாள்கள் தங்கியிருந்து பயிற்சி பெற்றுள்ளார். இதனால் மேரி கொம் தன்னைத்தானே தனிமைப்படுத்தியுள்ளார். (ம)

## நீண்ட பரிசீலனைக்குப் பின்

# ஒலிம்பிக் தொடரை பிற்போட வாய்ப்பு!

## ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ தெரிவிப்பு

டோக்கியோ, மார்ச் 24
ஒலிம்பிக் தொடர் எந்தக் காரணம் கொண்டும் பிற்போடப்படாது என்று தெரிவித்துவந்த ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே, தற்போது 'ஒலிம்பிக் தொடர் பிற்போடப்பட வாய்ப்பு உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜப்பான் முழுநிறைவான ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவே விரும்புகிறது. ஆனால் இது கடினமானது என்று தோன்றுகிறது. காரணம் நாம் முதலில் தடகள வீரர்களைப்பற்றி யோசிக்க வேண்டியுள்ளது. எனவே ஒலிம்பிக் போட்டிகளை ஒத்திவைப்பது தவிர்க்க முடியாததாகவே படுகிறது' என்றார். (ம)

## உலக கார்ப்பந்தயம் பிற்போடப்படலாம்!

லண்டன், மார்ச் 24
கொரோனா அச்சம் காரணமாக உலக கார்ப்பந்தயத் தொடர் மேலும் பிற்போடப்பட வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.
2020ஆம் ஆண்டுக்கான பார்முலா 1 சீசன் கடந்த 14ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஜூன் 7ஆம் தேதி வரை முதல் சுற்று தொடங்குமா? என்பது சந்தேகமாக உள்ளது என்று உலக கார்ப்பந்தயத் தொடரை நடத்தும் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (ம)



## ஒலிம்பிக்கிலிருந்து விலகியது கனடா!

ஒட்டாவா, மார்ச் 24
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒலிம்பிக் தொடரை அடுத்த ஆண்டு வரை பிற்போட வேண்டும். இந்த ஆண்டு திட்டமிட்டபடி நடத்துவதானால் கனடா அந்தத் தொடரில் இருந்து விலகும் இவ்வாறு கனடாவின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் கனடாவின் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள விளையாட்டு அமைப்புகள் ஒலிம்பிக் போட்டிகளை இந்த ஆண்டு நடத்த வேண்டாம் என்று கோரிக்கை வைத்துள்ளன. இந்த நிலையில் கொரோனா அச்சுறுத்தல் முற்றிலும் மறையும் வரை ஒலிம்பிக்கை நடத்த வேண்டாம் என்ற கோரிக்கையுடன் கனடா நாடு ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலகுகின்றது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பு கருதி இந்த முடிவை எடுத்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கொரோனா பரவல் காரணமாக

# தனிமையில் ஹமில்டன்!

லண்டன், மார்ச் 24
கார்ப்பந்தயத்தின் ஜாம்பவான் என்று வர்ணிக்கப்படும் லூயிஸ் ஹமில்டன், கொரோனா பரவலால் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.
லண்டனில் இந்த மாதம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் இட்ரிஸ் எல்பா மற்றும் கனடா நாட்டின் பிரதமரின் மனைவி சோபி கிரேகோயர்ட்ரூடோ உள்ளிட்ட பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் 35 வயதான ஹமில்டனும் கலந்து கொண்டனர். இட்ரிஸ் எல்பா, சோபி கிரேகோயர்ட்ரூடோ ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
இதையடுத்து அவர்களுடன் விழாவில் பங்கேற்ற ஹமில்டன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். இதுதொடர்பாக ஹமில்டன் விடுத்துள்ள அறிக்கையில், 'நான் உடல் நலத்துடன் இருக்கிறேன் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கலந்து கொண்ட லண்டன் நிகழ்ச்சியில் பங்கேற்ற இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதை தொடர்ந்து எனது உடல் நிலை குறித்து பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளன. வைரஸ் தொற்றுக்கான எந்தவித அறிகுறிகளும் என்னிடம் இல்லை. இட்ரிஸ் எல்பா, சோபி கிரேகோயர்ட்ரூடோ ஆகியோரை சந்தித்து 17 நாட்கள் ஆகிவிட்டன.



இட்ரிஸ் எல்பாவை தொடர்பு கொண்டேன். அவர் நலமுடன் இருப்பதாக கூறியதை கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். எனது மருத்துவரிடம் பேசினேன். எனக்கு பரிசோதனை செய்ய வேண்டுமா? என இருமுறை கேட்டேன். ஆனால் இங்கு உண்மை நிலை என்னவெனில் குறிப்பிட்ட அளவிலேயே சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்னைவிட அதிகமானோருக்கு பரிசோதனைகள் தேவைப்படுகின்றன எனக் கூறப்பட்டுள்ளது - என்றார். (ம)

## ஐ.பி.எல். தொடர் தொடர்பில் இன்று தீர்க்கமான முடிவுகள்

புதுடெல்லி, மார்ச் 24
ஐ.பி.எல் தொடர் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படுவதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும், ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்களும் இன்று முக்கிய சந்திப்பில் ஈடுபடவுள்ளனர்.
இந்த வருடம் நடைபெறுவதாக இருந்த ஐ.பி.எல் தொடர் கொரோனா காரணமாகப் பிற்போடப்பட்டது. இதனால் தொடர் மீண்டும் நடைபெறுமா அல்லது இல்லையா என்பது தொடர்ந்து விவாதங்களுக்கு உரியதொன்றாகவே உள்ளது.
இந்த நிலையில் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் 8 அணிகளின் உரிமையாளர்கள் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகளுக்கு இடையில் இன்று பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சின் அடிப்படையில் தொடரை நடத்துவதா? நடத்துவதாயின் என்ன அடிப்படையில் தொடர் இடம்பெறும்? என்ற முடிவுகள் எடுக்கப்பட வாய்ப்புண்டு எனக் கருதப்படுகின்றது. (ம)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2020இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.